தாயார் ஸன்னதியை ஸேவித்துக்கொண்டு தெற்கேயிருக்கும் படிகள் வழியாக இறங்கிச் சென்றால் 'ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்றாழி தொட்டானை' என்ற மங்களாஸாஸநத்திற்கேற்றபடி கருடாரூடரான ஸ்ரீ கஜேந்த்ர வரதனை ஸேவிக்கிறோம். கிலமாயிருந்த இந்த சன்னதி சமீபகாலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. இவரைப் பிரதக்ஷணமாகச் சென்றால் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸ்வாமியின் மஹா மண்டபத்தை அடைகிறோம். இடதுகைப்பக்கம் ஸ்ரீ திருமழிசையாழ்வார் சன்னதியை ஸேவித்துக் கொண்டு ஸ்ரீ அழகிய சிங்கரின் வெளிப்ராகாரத்தை அடைந்தால் அங்கு அவருக்கு ப்ரத்யேகமாக ஏற்பட்டுள்ள த்வஜாரோஹணமண்டபம், கருடன் ஸன்னதி, த்வஜஸ்தம்பம், பலிபீடம், கல்யாண மண்டபம் இவைகளைக் காணலாம். அங்கே ஸேவித்து விட்டு, உள்ளே திரும்பி வந்தால் மேற்கு திருமுகமண்டலத்துடன் வீற்றிருக்கும் திருக்கோலமான ஸ்ரீ தெள்ளிய

சிங்கர் என்று மங்களாஸாஸநம் செய்யப்பெற்ற ஸ்ரீ யோகந்ருஸிம்ஹர் ஸன்னதியை ஸேவிக்கலாம்.

இவரது மஹா மண்டபத்திற்கு வடக்கு கோடியில் ஸ்ரீ ஆண்டாள் ஸன்னதி இருக்கிறது. இந்த ஸன்னதிக்கு முன் பாகம் சமீபத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டது. இதன் வழியே வரும்பொழுது ஸ்ரீ பார்த்தஸாரதியின் ஆனந்த விமாநஸேவை நன்றாய் ஆகும். இந்த மண்டபத்தைக் கடந்து சென்றால் ஸ்ரீ ஆளவந்தார் ஸன்னதியை அடைந்து, மறுபடியும், ஸ்ரீ திருவாய்மொழி மண்டபத்தை அடைகிறோம். இந்த மண்டபத்தில் தான் ஸாதாரணமாக எல்லா உத்ஸவங்களும் நடைபெறுகின்றன. மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் கிழக்கு முகமாக கூரத்தாழ்வார், முதலியாண்டான் ஸன்னதியும், வடவண்டை தெற்கு பார்த்தாப் போல் வரிசையாக ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ வேதாந்த தேசிகன், ஸ்ரீ திருக்கச்சிநம்பி இவர்களின் தனித்தனி சன்னதிகளுமிருக்கின்றன. ஆசாரியர்களுடைய அநுக்ரஹம் பெற்றுதான் பெருமாளை ஸேவிக்க வேண்டும் என்கிற ரீதியில் இந்த சன்னதிகள் அமைந்திருக்கின்றன போலும். த்வாரபாலகர்களைத்தாண்டி உள்ளே சென்றால் நேரே ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னதியும், வலப்புறத்தில் ஸ்ரீ மன்னாதன், ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் ஸன்னதிகளும், இடப்புறத்தில் சிறிய திருவடி ஸன்னதியும், ஆழ்வார்கள் ஸன்னதிகளுமிருக்கின்றன.

ஸ்ரீ மன்னாதன் ஸன்னதியில் வெகு கம்பீரமாக புஜங்க சயனத்தில் ஆதிசேஷ படலத்தில் பகவான் சயனத்திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் ஸேவிக்கலாம். பின்புறத்தில் ஸ்ரீதேவி, பூதேவிகள் வீற்றிருக்கும் அழகும், பெருமாளுக்கு தலைப்புறத்தில் யக்ஞ வராஹ மூர்த்தியுடன், திருவடி புறத்தில் உக்ரந்ருஸிம்ஹனும், சிலாபேரங்களாக எழுந்தருளியிருப்பதையும் மிகச்சிலரே அறிவர். தெற்கு திருமுக மண்டலத்துடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் ஸன்னதியில், ஆழ்வார் மங்களாஸாஸனப்படி "பரதனும் தம்பி சத்ருக்னனும் இலக்குமணனோடு மைதிலியும்" ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனுடன் ஸேவை ஸாதிக்கிறார்கள். இவருக்கு எதிரே எழுந்தருளியிருக்கும் சிறிய திருவடி திருமேனி மிக கம்பீரமாயும், உத்ஸவ பேரத்துடனுமிருக்கிறார்.

உள்ளே சென்றால் ஸேவிப்போர்களை ப்ரமிக்க செய்யும் கம்பீரமான மந்தஹாஸத்துடன் கூடிய ஸ்ரீ பார்த்தஸாரதி மூலவரின் ஸேவைபோல் எங்குமே கிடையாது என்று சொல்லலாம். ஸம்ப்ரதாயப்படி இங்கு த்ருவபேரமாக எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீ வேங்கட க்ருஷ்ணன் என்றும், உத்ஸவ பேரமாயிருப்பவருக்கு ஸ்ரீ பார்த்தஸாரதி என்றும் வெவ்வேறு திருநாமங்கள் வழங்குவதுண்டு. இதையொட்டியே ஸாதாரணமாக ஸன்னதிகளின் உத்ஸவர் வெளியில் எழுந்தருளியிருக்கிற காலங்களில் மூலவரை ஸேவிப்பது உசிதமில்லை என்னும் ஸம்ப்ரதாயம் இங்கு அநுஷ்டிப்பதில்லை. அர்ச்சனை முதலிய உபசாரங்களிலும் அவரவர்களது வெவ்வேறு திருநாமங்களையே உபயோகித்து வருகிறார்கள்.

மத்தியில் மிக உன்னதமாகவும் கம்பீரமாகவும் உத்தம தச லக்ஷணங்கள் பொருந்தியுமிருக்கும் ஸ்ரீ வேங்கடக்ருஷ்ணஸ்வாமியை ஸேவிக்கலாம். ஸுமதி மன்னரின் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ வேங்கடேசன் அர்ஜுனனுக்கு ரதஸாரத்யம் செய்த அவசரமாகையால், த்விபுஜத்துடன் வலதுகையில் பாஞ்சசன்யத்தை (திரு சங்கை) ஏந்தியும், இடது கை வரத ஹஸ்தமாயும் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறார். பெருமாள் வலது பக்கத்தில் மிக அழகு தவழும் திருமுக மண்டலத்தையுடைய ஸ்ரீ ருக்மிணி பிராட்டியார் நிற்கிறார். தாயாருக்கு வலது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு ஒரு கையில் கலப்பையையும், மற்றொரு கையை வரதஹஸ்தமாயும் வைத்துக்கொண்டிருக்கும் பலராமர் நிற்கிறார். பெருமாளுக்கு இடது பக்கத்தில் சாத்யகி கிழக்கு நோக்கியவாறும், ப்ரத்யும்னன், அநிருத்தன் இருவரும் தெற்கு நோக்கியவாறும், பெருமாள் தமது குடும்ப ஸமேதராய் ஸேவை ஸாதிக்கிறார். இந்த மூர்த்தி, ஸ்தல புராணப்படி, வ்யாஸமுனிவரால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்று ஆத்ரேயமுனிவருக்கு அருளப்பெற்று, கைரவிணி தீரத்தில் ப்ருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பெற்றதாகக் கொள்கை. மூலவரின் திருமேனியே ஸ்ரீமத் பகவத் கீதையின் ஸ்வரூபம்

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி திருக்கோலங்கள்



ஸ்ரீ பட்டாபிராமன் PHOTO BY T. N. SRINIVASAN
(பகல்பத்து - 8ம் நாள்)

KENDRIYA ... LIBRARY
15013

ஸ்ரீ ராதா க்ருஷ்ணன் PHOTO BY T. N. SRINIVASAN
(பகல்பத்து - 9ம் நாள்)

என்று பெரியவர்கள் கருதுகிறார்கள். வலது திருக்கையிலுள்ள பாஞ்சஜன்யம் கீதையில் முதல் அத்யாயத்திலுள்ள

"பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ"

என்னும் 15-வது ஶ்லோகத்தின் பொருளை உணர்த்தி, இடது திருக்கை வரதஹஸ்தமாக இருப்பது மிகப் பிரபலமான 18-வது அத்தியாய சரமஶ்லோகமாகிய

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: || (66-வது ஶ்லோகம்)

என்பதைப் பிம்பரூபத்தில் ப்ரதிபாலிக்கிறதாக பெரியோர்களின் ரஹஸ்யார்த்தக் கொள்கை. பெருமாளை ஸாதாரணமாய் ஸேவித்தாலே ஸ்ரீ பகவத்கீதை பாராயணம் செய்த பலனடைவதாக கருத்து.

சாத்யகியின் முன் புறத்தில் உத்ஸவ மூர்த்தியான ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவிகளாகிய உபயநாச்சியார்களுடன் எழுந்தருளியிருக்கிறார். எந்தத் திவ்ய தேசத்திலுமில்லாத வெகு வசீகரமான திருமேனியுடன், யுத்த பாணங்களால் ஏற்பட்ட வடு சின்னங்களோடு கூடிய கரிய புன்னகை தவழ்ந்த திருமுக மண்டலத்தை உடைய இந்த எம் பெருமானின் ஸேவை, கண்டு அனுபவிக்கத்தக்கது. ஸ்வர்ண திருமேனி கவசத்தின் ப்ரகாசத்தையும் கர்ண பத்திரங்களிலும் லலாடப்பட்டையிலும் உள்ள வைரங்களில் ஜ்வலிப்பையும் ப்ரதிபாதிக்கும்படி பெருமாளின் கரிய திருமுக மண்டலமும், அதன் மத்தியில் வைரங்களால் இழைக்கப்பட்ட பூர்ண சந்திரன் போன்ற திலகமும் எந்த திவ்ய தேசத்தின் எம்பெருமானுக்குமில்லை என்பது சகலரும் அறிந்த விஷயம்.

மூலவரின் திருவடிவாரத்தில் இதர பஞ்சபேரங்களான நித்ய உத்ஸவர், பலிபேரம், ஸயநபேரம் ஆகிய மூன்று மூர்த்திகளும், நவநீத கண்ணனும், சுதர்சனமும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

ஸன்னதிகள் எல்லாவற்றையும் ஸேவித்துக்கொண்டு திரும்பி கோவிலுக்கு வெளியே வந்து வடக்கு முகமாகத் திரும்பினால் எதிரே பெருமாளின் வாஹன மண்டபமிருக்கிறது. இதில் ப்ரஹ்மோத்ஸவ காலங்களில் வாஹனங்களில் பெருமாள் ஆரோகணித்து திருவீதி புறப்பாடுகள் நடைபெறுகின்றன. இந்த வாஹன மண்டபத்திற்குப் பின்புறம் நம்மாழ்வார் ஸன்னதியிருக்கிறது. நம்மாழ்வார் சாத்துமுறைக்கு ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி இங்கேயே எழுந்தருளி திருமஞ்சனம் முதலியவைகள் கண்டருளி சாத்துமுறை ஆனபிறகு ஸன்னதிக்கு எழுந்தருளுகிறார். எல்லா புறப்பாடு காலங்களிலும் நம்மாழ்வாருக்கு ஸ்ரீசடகோபம் முதலிய மரியாதை செய்யாமல் புறப்பாடு நடத்த முடியாதபடி நம்மாழ்வார் ஸன்னதி அமைந்திருக்கிறது கவனிக்கத்தக்கது.

ஸந்நதிக்கு எதிரேயிருப்பதுதான் கைரவணீ புஷ்கரிணி. இதைப்பற்றி ஸ்தலபுராணம் மிக மேன்மையாகக் கூறுவதுடன் :—

" சஷ்டீர் வருஷ ஸகஸ்ராணி பாகீரத்யாவகாஹநாத்
யத்பலம் லபதே கௌரீ ஸக்ருத் கைரவிணீ ஜலே "

என்று கங்கையையும் விட புனிதமானது என்று சிலாகிக்கிறது. கைரவிணியில் மத்ஸ்யங்கள் ஜீவிக்கிறதில்லை என்பது ஒரு அரிய விஷயம். ஸமுத்ர கரைக்கு அவ்வளவு அருகாமையிலிருந்தும் மத்ஸ்யவகைகள் இந்த புஷ்கரிணி ஜலத்தில் ஜீவிக்க முடியாமலிருப்பது நோக்கத்தக்கது.

இந்த புஷ்கரிணியில்தான் தெப்போத்ஸவம் ஏழு நாட்கள் வெகு விமர்சையாக நடைபெறுகிறது. இந்தக் குளத்திற்கு கிழக்கு சாரியில் ஒரு ஹனுமார் ஸன்னதியிருக்கிறது. ஸ்ரீந்ருஸிம்ஹ ஸ்வாமி தீர்த்த வாரிக்கு இந்த ஸன்னதிக்குத்தான் எழுந்தருளுகிறார்.

ஸன்னதிக்கு வடபுறமுள்ள பேயாழ்வார் கோவில் தெருவில் ஸ்ரீ பேயாழ்வாருக்கு ப்ரத்யேகமான ஸன்னதியிருக்கிறது. இங்கு ஆழ்வாரும் ஸ்ரீ கண்ணபிரானும் எழுந்தருளி யிருக்கிறார்கள். இந்த ஸன்னதிக்கு மேற்குப்புறத்தில் ஒரு சிறிய நந்தவனமிருக்கிறது. நித்யப்படி ஆராதனத்திற்காகப் புஷ்பம், திருத்துழாய் முதலியவைகள் இங்கிருந்து கொடுக் கப்படுகின்றன.

இவ்வாறு விவரிக்கப்பட்டபடி, ஸாதாரணமாகப் பிரதி தினமும் அநேக பக்தர்கள் ஸ்ரீ கீதாசாரியரான ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியையும் இதர எம்பெருமான்களையும் ஸேவித்து வருகிறார்கள். "கலௌ வேங்கட நாயகம்" என்றும் "க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்றும் மஹான்களால் போற்றப்பெற்ற ஸ்ரீ வெங்கடேசனும், ஸ்ரீ க்ருஷ்ணனுமாகிய இரண்டு திவ்ய மூர்த்திகள் ஒன்று திரண்டு ஓர் உருவமாய் "ஸ்ரீவேங்கடக்ருஷ்ணன்" என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் இந்த திவ்ய தேசம், சென்னை நகரத்தில் உள்ளவர் களுக்கும், வருபவர்களுக்கும், அவசியம் ஸேவிக்க வேண்டிய க்ஷேத்ரமாக விளங்குகிறது.

மேலும், கோயில், திருமலை, பெருமாள் கோவில் என முக்கியமாக வைஷ்ணவர் களால் கருதப்படும் திவ்ய தேசங்களின் எம்பெருமான்களான மும் மூர்த்திகளுடன், அஹோபிலம், அயோத்தியில் எழுந்தருளியிருக்கும் விபவாவதார மூர்த்திகளும் ஆகிய ஐவரும் இந்த திவ்ய தேசத்தில் ஒருங்கு கூடி ஐந்து மங்களாஸாஸனமான எம்பெருமான் களாக எழுந்தருளி யிருப்பது மிக சிலாக்யமானது.

இனி இந்தக் கோவிலில் நடக்கும் முக்கியமான வருஷாந்திர உத்ஸவங்களைப்பற்றி கொஞ்சம் விவரிப்போம்.

முக்ய வார்ஷிக உத்ஸவங்கள்

நித்யப்படி மாதத்திய உத்ஸவங்கள்—ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமிக்கு, பிரதி மாஸப்ரவேசத் திற்கும், ரோகிணி, ஸ்ரவண நக்ஷத்திரங்களிலும், பௌர்ணமியன்றும் மாடவீதி புறப்பாடு ஆகும். அதேபோல் ப்ரதி அமாவாஸையும் ஏகாதசியன்றும் பெரிய வீதி ப்ரதக்ஷிணம் கண்டருளுவார். இதைப்போலவே ஸ்ரீ ந்ருஸிம்ஹன் சுவாதி நக்ஷத்திரத்தன்றும், ஸ்ரீ ராமன் புனர்வசுநக்ஷத்திரத்தன்றும், ஸ்ரீ கஜேந்த்ரவரதன் ஹஸ்தத்தன்றும், ஸ்ரீ மன்னாதன் ரேவதி யன்றும் மாட வீதி புறப்பாடு கண்டருளுவார்கள். அதேபோல் ஸ்ரீ வேதவல்லித்தாயார் உத்திர நக்ஷத்திரத்தன்றும், மற்ற உத்ஸவங்கள் கலக்காத வெள்ளிக்கிழமைகளிலும் ஸந்நிதிக் குள்ளேயே எழுந்தருளுவார்.

இதைத் தவிர ஒவ்வொரு ஆழ்வார் ஆசார்யார்களின் வார்ஷிக திருநக்ஷத்திரத்திற்கும் பெருமாளுக்கு அவர்களுடன் சாத்து முறை புறப்பாடு நடக்கும்.

சில முக்யமான உத்ஸவங்கள்

சித்திரை மாஸம்—இந்த மாஸத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறு கிறது. சித்திரை நக்ஷத்திரத்தில் த்வஜாரோகணமாகி, ஒன்பது நாள் உத்ஸவம் கண்டருளி ஸ்ரவண நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரியாகி, அடுத்த நாள் ஸப்தாவரணம் நடக்கும். இந்த தினங் களில் காலை மாலை புறப்பாடுகள் கீழ்கண்ட வாஹநாதிகளில் கண்டருளுவார்.

	காலை	மாலை
1.	தர்மாதி பீடம்	புன்னைமரவாஹனம் (வேணுகோபாலன் திருக்கோலம்)
2.	சேஷவாஹனம் (பரமபதநாதன்)	ஸிம்ஹவாஹனம்
3.	கருடவாஹனம்	ஹம்ஸவாஹனம்
4.	சூரியப்ரபை	சந்த்ரப்ரபை

5. மோஹனவதாரம் (பல்லக்கில்)	ஹநுமந்த வாஹனம்
6. ஆநந்த விமாநம் (சூர்ணுபிஷேகம்)	யானை வாஹனம்
7. திருத்தேர்	தோட்ட திருமஞ்சனம்
8. வெண்ணைத் தாழி சேர்வை (பல்லக்கில்)	குதிரை வாஹனம்
9. ஆளும் பல்லக்கு	கண்ணாடி பல்லக்கு
10. ஸப்தாவரணம்-வெட்டிவேர் சப்பரம்.	

சித்திரை மாஸத்தில் இந்த ஸன்னதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உடையவருக்கு தினம் இரண்டு வேளை புறப்பாடுகளுடன் உத்ஸவம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் சாத்துமுறையாக முடியுமாறு நடக்கிறது. ஸாதாரணமாக எல்லா ஆழ்வார் ஆசாரியர்கள் உத்ஸவங்களிலும் பெருமாள் எழுந்தருளின போதிலும், உடையவருக்கு தனிப்படியாக புறப்பாடு நடப்பதற்கு ஒரு விசேஷமிருக்கிறது.

கலியுகத்தில் விசிஷ்டாத்வைத ஸ்தாபிதராக அவதரித்த ஸ்ரீ ராமாநுஜர் என்ற உடையவரின் அவதாரம் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் கடாக்ஷம் என்று கருதப்படுகிறது. இது விஷயம் பிள்ளைலோகஞ் ஜீயர் செய்தருளிய "ராமாநுஜார்ய திவ்ய சரிதை" என்னும் ஸ்ரீகோசத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதில் :—

"ஸ்ரீமந் மஹாபூதபுரியிலே ஆஸூரி கேஸவப் பெருமாள் என்கிறவர் மாக மாஸத்தில் (வைகாசி மாஸம்) மயிலாபுரியில் கைரவணீ தீரத்திலே மஹதாஹ்வயருடைய அபிமாந ஸ்தலத்திலே "அஹம்ஹிஸர்வயஜ்ஞாநாம் போக்தா சம்ரபூரேவச" என்றும் சொல்லுகிறபடியே அவன் அபீஷ்டத்தைக் கொடுக்குமவனாகையாலே, அப்படியே "பார்த்தன் தன் தேர் முன் நின்றானை" "அன்றைவர் தெய்வத் தேரினிற் செப்பிய கீதை" என்னும்படி உபதேசித்தருளின கீதோபநிஷதாசாரியனை பெருமாள் தாமே கேஸவ ஸோமயாஜியாரின் பத்னியான காந்திமதியம்மையாரின் கர்ப்பத்தில், ஸோமயாஜீ ஸ்வாமி செய்த புத்ரகாமேஷ்டி யக்ஞத்தின் பலனாக அவதாரம் செய்தார்". "ஸ்ரீ பார்த்தஸாரதியே கீதையின் செம்மைப் பொருள் தெரியப்பாரினிற் சொன்ன விராமாநுசனாக" எழுந்தருளியது படியே, இவரது உத்ஸவத்தில் வேறு பெருமாள்களின் புறப்பாடுகள் ஸாதாரணமாக கலக்காமல் தனியே எழுந்தருளுவது மிக ஏற்றமானது.

வைகாசி—வஸந்த உத்ஸவம் சுக்லபக்ஷ தசமியில் முடியுமாறு ஏழுநாள்கள் நடைபெறும். பெருமாள் வஸந்த உத்ஸவ பங்களாவுக்கு காலையிலேயே எழுந்தருளி தினம் திருமஞ்சனம் ஆனபிறகு சாயங்காலம் அங்கு தோட்ட ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ராத்ரி ஸன்னதிக்குத் திரும்பிவருகிறார். இந்த மாஸத்திலேயே ஸ்ரீமன்நாத ஸ்வாமிக்கும், ஸ்ரீவேதவல்லித் தாயாருக்கும் ஸன்னதிக்குள்ளேயே, ரேவதி நக்ஷத்திரத்தில் முடியுமாறு மூன்று நாட்கள் வஸந்த உத்ஸவம் நடைபெறுகிறது.

இந்த மாஸத்தில் காஞ்சீபுரம் ஸ்ரீவரதராஜன் உத்ஸவத்திற்குச் சரியாக இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகஜேந்த்ரவரதருக்கு 10 நாள் உத்ஸவம் ஒரு வேளை புறப்பாட்டுடன் நடக்கிறது. நம்மாழ்வார் உத்ஸவம் விசாக நக்ஷத்திரத்தில் சாத்துமுறை. சுக்லபக்ஷ சதுர்த்தி கூடிய சுப தினத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தி.

ஆனி—ஸ்ரீந்ருஸிம்ஹ ஸ்வாமிக்கு ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமியைப் போல் 10 நாள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது.

சுத்த பிரதமையில் ஆரம்பித்து ஏழுநாள் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமிக்கு கோடை உத்ஸவம் வஸந்த உத்ஸவ பங்களாவில் நடைபெறுகிறது. தினமும் சாயந்திரம் பெருமாளும், உபய நாச்சியார்களும் தனித்தனியே தங்கத் தொட்டில்களில் அங்கு எழுந்தருளி ஊஞ்சல்

கண்டருளி, பிறகு ராத்ரி ஸந்நிதிக்குத் திரும்பி எழுந்தருளுகிறார்கள். பெரியாழ்வார் பரதத்வ நிர்ணய உத்ஸவம் ஆனிகருடன்-ஸ்வாதி நக்ஷத்திரம் சாத்துமுறை.

ஆடி—ஸ்ரீ ஆண்டாளுக்கு 10 நாள் திருவாடிப்பூர உத்ஸவம் நடைபெறுகிறது.

பௌர்ணமி தினத்தன்று ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி கஜேந்திர மோக்ஷ உத்ஸவம் கருடசேர்வையில் கண்டருளுகிறார். அதற்கு அடுத்த நாள் அவருக்கு "ஜேஷ்டாபிஷேகம்" வெகு விமர்சையாக நடைபெறுகிறது. அன்று ஒரு நாள்தான் பெருமாள் உபய நாச்சி மார்கள் சுய திருமேனியை திருமஞ்சன காலத்தில் ஸேவிக்கமுடியும். அன்று இரவே மறு படியும் ஸ்வர்ண கவசங்கள் சாத்தப்படும். இதே மாதிரி, இந்த ஜேஷ்டாபிஷேகத்திற்குப் பிறகு ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ தெள்ளியசிங்கருக்கும் ரேவதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீமன்னாத ஸ்வாமிக்கும் ஜேஷ்டாபிஷேகங்கள் நடைபெறும்.

ஆவணி—சுத்த தசமியில் ஆரம்பித்து பிரதமையில் முடியுமாறு ஏழு நாள் பவித்ரோத் ஸவம் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமிக்கு நடைபெறுகிறது. முதல் உத்ஸவத்தன்று பெருமாளுக்கு ஸதகலச திருமஞ்சனம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

இந்த மாஸத்திலேயே ஸ்ரீஜயந்தி உத்ஸவம் வருகிறபடியால் ஜயந்தியன்று கண்ணன் உத்ஸவம். மறுநாள் காலை கண்ணன் சின்னசேஷ வாஹன புறப்பாடும், சாயந்திரம் கண்ண னுடன் பின்னை வாஹனத்தில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி உரியடி புறப்பாடும் நடை பெறுகின்றன.

புரட்டாசி—நவராத்திரி ஒன்பது நாள்களும் ஸ்ரீ வேதவல்லித் தாயாருக்கு மிக உன்னத மான உத்ஸவம் நடைபெறுகிறது. கல்யாண மண்டபத்தில் ஜோடித்துள்ள கொலு மண்ட பத்தில் தாயார் வாஹனாதிகளில் எழுந்தருளுகிறார். மஹா நவமியன்று தாயாருடன் ஸ்ரீ மன்னாத ஸ்வாமியும் வருகிறார். விஜயதசமிக்காக ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி வஸந்த உத்ஸவ பங்களாவுக்குச் சென்று வன்னிமர பார்வேட்டை கண்டருளுகிறார்.

இம்மாதத்திய சனிக்கிழமைகள் இங்கு மஹா விசேஷமாகக் கொண்டாடப்படு கின்றன. மற்ற உத்ஸவங்கள் ஏற்படாமலிருந்தால், சனிக்கிழமை சாயந்திரம் ஸ்ரீ அழகிய சிங்கர் பெரிய வீதி புறப்பாடு கண்டருளுகிறார். ஸ்ரவணம் நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ வேதாந்த தேசிகன் சாத்துமுறை உத்ஸவம் நடைபெறும்.

ஐப்பசி—தீபாவளி உத்ஸவம் விமர்சையாக நடந்தேறிய பிறகு சுக்ல பிரதமையன்று ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமிக்கு அன்னகூட உத்ஸவம் நடைபெறுகிறது. விசேஷ தளிகைகள் அமுது செய்கிறார்கள். மணவாள மஹாமுனிகள் சாத்துமுறையன்று காலையில் ஸ்ரீ பார்த்த ஸாரதி ஸ்வாமிக்கு 'கைத்தல சேர்வை' என்று ஒரு விசேஷ ஸேவார்த்தம் நடக்கிறது. பெருமாள், உபயநாச்சிமார்கள் ஆஸ்தானத்திலிருந்து திருவாய்மொழி மண்டபத்திற்கு அர்ச்சகாள் கைத்தலத்தில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வரும் ஸேவை எங்குமே கிடையாது என்று சொல்லலாம். திருவோணம், அவிட்டம், சதயம் இந்த மூன்று நக்ஷத்திரங் களில் முறையே ஸ்ரீ பொய்கையார், பூதத்தார், பேயார் இவர்களுடைய சாத்து முறைகள் நடைபெறும்.

கார்த்திகை—கைசிக ஏகாதசிக்கு மறுநாள் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி வன போஜனம் கண்டருளுகிறார். வஸந்த உத்ஸவ பங்களாவுக்கு காலையிலேயே எழுந்தருளி திருமஞ்சனம் கண்டருளி மாலை தோட்ட பிரதக்ஷணம் ஆனபின் சன்னதிக்கு எழுந்தருளு கிறார். பிறகு பௌர்ணமியன்று திருக்கார்த்திகை உத்ஸவமான பிறகு பெருமாளுக்கு தைல காப்பு ஸமர்ப்பிக்கப்படுகின்றது. அன்று முதல், வைகுண்ட ஏகாதசி வரையில் எந்த ஸந்நதி யிலும் மூலவரை ஸேவிக்கமுடியாதபடி திரை சேர்க்கப்படுகிறது.

மார்கழி—வழக்கப்படி தனுர்மாஸம் ஆராதனம் நடைபெறுகிறது. இந்த மாதத்தில் தான் அத்யயன உத்ஸவம் எனப்படும் பகல் பத்து, இராப்பத்து உத்ஸவங்கள் இருபது

LIBRARY

ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி திருக்கோலங்கள்



மோஹனாவதாரம்

PHOTO BY T N SRINIVASAN

(பகல்பத்து உத்ஸவம் - 10ம் நாள்)

நாள்கள் வெகு விமர்சையாக நடைபெறுகின்றன. பகல் பத்து உத்ஸவம் சுத்த பிரதமையில் தொடங்கி தசமியில் ஸமாப்தமாகிறது. வைகுண்ட (முக்கோட்டி) ஏகாதசியில் தொடங்கி பத்து நாள் இராப்பத்து உத்ஸவம் நடைபெறுகின்றது.

பகல் பத்து உத்ஸவம்—ஆழ்வார் ஆசாரியார்கள் திருவாய்மொழி மண்டபத்தில் கொலுவிருக்க, பெருமாளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருக்கோலம் சமர்ப்பித்து முதலாயிரமும், பெரிய திருமொழியுமாக பாசுரங்கள் தினம் 200 வீதம் ஸேவையாகிறது.

திருக்கோல விவரங்கள்

1. வேங்கடக்ருஷ்ணன் (மூலவர் திருக்கோலம்)
2. வேணுகோபாலன்
3. காளிங்க மர்த்தனம்
4. கோதண்டராமன்
5. ஏணிக்கண்ணன்
6. பரமபத நாதன்
7. பகாசுரவதம்
8. பட்டாபிராமன்
9. ராதாகிருஷ்ணன்
10. நாச்சியார் திருக்கோலம் (மோஹனாவதாரம்)

வைகுண்ட ஏகாதசியன்று பெருமாள் சூரிய உதயத்திற்கு முன்பே சுவர்க்க வாசல் வழியாக கொட்டகைப் பந்தலுக்கு எழுந்தருளி சாயந்திரம் வரையிலும் ஆனந்த விமானத்தில் எழுந்தருளியிருப்பார். பிறகு இரவு திருமஞ்சனமும் வீதி புறப்பாடும் நடைபெறும். இதைப் போலவே பத்து நாள் உத்ஸவம் ஆகிறது. ஒன்பதாவது நாள் கோவர்த்தனகிரி திருக்கோலம் மிகவும் அழகாகயிருக்கும். சாத்துமுறை ஆன பிறகு ஒவ்வொரு நாளும் இசைக் கச்சேரி களுடன் ஏகாந்த ஸேவை நடைபெறும்.

இந்த மாதத்திலேயே கடைசி ஒன்பது நாள் ஆண்டாள் நீராட்ட உத்ஸவம் நடை பெறுகிறது.

தை—சங்கராந்தி பார் வேட்டை உத்ஸவம் நின்று விட்டதால் அன்றையதினம் நாலு வீதி புறப்பாடு நடக்கிறது. பெருமாளுக்கு தைமாஸ பௌர்ணமி யன்று தைபூச உத்ஸவம் நடைபெறுகிறது. ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி 'காளிய மர்த்தன' திருக்கோலத் துடன் பெரிய தெருவுக்கு எழுந்தருளி அங்கு கதிர் அலங்காரமாகித் திரும்பி எழுந்தருளுவார்.

ரதஸப்தமியன்று காலே சூரியப்ரபையிலும், இரவு சந்த்ரப்ரபையிலும் விசேஷ திருவாபரணங்களுடன் பெரிய வீதி புறப்பாடு நடக்கிறது.

மாசி—அமாவாஸை முதல் தெப்போத்ஸவம் வெகு விமரிசையாக கைரவிணி புஷ்கரிணி யில் எல்லா எம்பெருமான்களுக்கும் நடக்கிறது. முதல் மூன்று நாள் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி தெப்பம். இதில் 3-ம் நாள் பெருமாளுக்கு நீராழி மண்டபத்தில் திருமஞ்சனம் கண்டருளி தெப்பத்திலேயே இருக்கிறார். இதன் பிறகு ந்ருஸிம்ஹ ஸ்வாமி, ராமர், வரதராஜன், மன்னாதன் முதலியவர்களுக்கு ஒவ்வொரு நாள் தெப்பம் நடைபெறுகிறது.

தெப்ப உத்ஸவம் ஆனவுடனேயே ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி தவன உத்ஸவம் ஐந்து நாள் சுத்த தசமியில் முடியுமாறு நடக்கிறது. தினம் பெருமாள் காலேயில் தவன உத்ஸவ பங்களாவுக்கு எழுந்தருளி திருமஞ்சனமான பிறகு, சாயந்திரம் பங்களா சுற்றி வந்து, இரவு திரும்பி ஸந்நிக்கு எழுந்தருளுவார்.

இதேமாதிரி ஸ்ரீ ந்ருஸிம்ஹருக்கு சுவாதி, விசாகம், அனுஷம் நக்ஷத்திரம் கூடிய தினங்களில் மூன்று நாளும், ஸ்ரீ கஜேந்தர வரதனுக்கு ஹஸ்தம் கூடிய தினத்திலும் தவன உத்ஸவம் நடைபெறுகின்றது. மூல நக்ஷத்ர தினம் ஸ்ரீ வேதவல்லி சமேத ஸ்ரீ மன்னாதருக்கு தவன உத்ஸவம் ஸ்ரீ மணவாளமாமுனிகளுடன் நடைபெறுகிறது.

மாசிமாதம் பௌர்ணமியன்று பெருமாள் மாசி மகோத்ஸவம் கண்டருளுகிறார். ஸூர்யோதயத்தின்போது கருடவாஹனரூடராய் ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி சமுத்திரக் கரைக்கு எழுந்தருளி, வாஹனத்துடன் ஜலத்தில் மூன்று தடவை சென்ற பிறகு அங்கு போட்டிருக்கும் ஒரு பந்தலில் எழுந்தருளுவார். பிறகு சக்கிரத்தாழ்வாருக்கு திருமஞ்சனமாகி அவர் தீர்த்தம் ஸாதிக்கும் பொழுது எல்லாரும் ஸமுத்ர ஸ்நாநம் செய்வது மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. சாயந்திரம் பெருமாள் சேஷவாஹனத்தில் பரமபத நாதன் திருக்கோலத்துடன் பெரிய வீதி புறப்பாடு கண்டருளுவார்.

ப்ரஹ்மாண்ட புராணத்திலுள்ள ஸ்தல புராணப்படி மாசிமாஸம் சுத்த சுக்கிலபக்ஷ துவாதசியன்று இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேதவல்லித்தாயாருக்கும் ஸ்ரீ மன்னாத ஸ்வாமிக்கும் திருக்கல்யாணம் பிருகுமஹரிஷி செய்ததாகச் சொல்லியிருப்பதைக் குறித்து தாயார் திருக்கல்யாண உத்ஸவம் அன்று நடைபெறுகிறது. அன்று வைதீக முறையில் ஹோமாதிகள் வளர்த்து திருக்கல்யாண உத்ஸவமும், அடுத்த நாள் ஸன்னதிக்குள்ளே ஊர் வலமும் வெகு விமர்சையாக நடக்கின்றன.

பங்குனி—ஸ்ரீ ராமருக்கு ஸ்ரீராமநவமி உத்ஸவம் 9 நாள் ஒருவேளை புறப்பாட்டுடன் நடக்கின்றது. 3-ம் நாள் காலை கருடவாகனத்தில் ஸ்ரீ ராமர் ஸேவை சாதிக்கிறார்.

பல்லவ உத்ஸவம் பங்குனி உத்திரத்தில் முடியுமாறு ஐந்து தினங்கள் முந்தி தொடங்கி நடக்கிறது. கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ மன்னாத ஸ்வாமி எழுந்தருளி யிருக்க தினமும் 'ப்ருந்தாரண்ய' ஸ்தல மாஹாத்ம்யம் படித்து விளக்கப்படும். பிறகு ஸ்ரீ மன்னாத ஸ்வாமி பெரிய வீதி எழுந்தருளுவார். பங்குனி உத்திரத் திருநாளன்று ஸ்ரீ மன்னாத பெருமாளுக்கும் ஸ்ரீ வேதவல்லித்தாயாருக்கும் திருக்கல்யாண உத்ஸவம் தாயார் ஸன்னதியில் நடைபெறும். அடுத்த நாள் ஸன்னதி பிராகாரத்தில் இருவரும் ஊர்வலம் வருவார்கள்.

பங்குனிமாஸத்தில் யுகாதி உத்ஸவம் நடைபெறும். ஸாதாரணமாக அப்பொழுது ஸ்ரீராமநவமி உத்ஸவம் தொடங்குவதால் ஸ்ரீராமரின் முன்னிலையில் புதுப் பஞ்சாங்கம் ஸ்ரவணம் நடைபெறும். அப்படியில்லாவிட்டால் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி எழுந்தருளி அவருக்கு முன்பாகப் பஞ்சாங்கம் படிப்பார்கள்.

மேற்சொன்ன உத்ஸவங்களுடன், மாதா மாதம் ஆழ்வார் ஆசார்யர்களின் ஜன்ம நக்ஷத்திரங்களான உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. பொதுவாக அந்த உத்ஸவங்களுக்கு ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி எழுந்தருளி திருமஞ்சனம் கண்டருளி, பிறகு திருப்பாவை சாற்றுமுறையைக் கடாக்ஷித்து, ஸாதாரணமாக, பெரியவீதி புறப்பாடு கண்டருளி, பிறகு சாற்றுமுறையாகி தீர்த்த விநியோகங்கள் முடிந்த பிறகுதான் ஆஸ்தானம் எழுந்தருளுவார். சில சமயங்களில் இதர உத்ஸவங்கள் ஏற்படுமாயின், அதற்குத் தகுந்தாற்போல் திருநக்ஷத்திர உத்ஸவங்கள் கொண்டாடப்படும். ஆனால் பொதுவாக இந்த திவ்ய தேசத்தில் ஆசார்ய ஸேவை மிக சிலாக்யமாகவும் உபசாரத்துடனும் நடப்பது நோக்கத்தக்கது. இதில் ஸ்ரீபாஷ்யகாரருக்கு சித்திரை மாதத்தில் நடக்கும் பத்து நாள் வார்ஷிக உத்ஸவத்தில் பெருமாள் எழுந்தருளுவது கிடையாது என்பதைக் கவனிக்கவேண்டும். சில மாதங்களில் தமிழ் வருஷப் பிறப்பு, ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி விடாயாற்றி உத்ஸவம், வஸந்த உத்ஸவம் இவைகள் ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவத்தில் நேரிட்டால் அப்போது மாத்திரம் பெருமாள் எழுந்தருளுவார். சக்ரவர்த்தி திருமகன் உத்ஸவம் நேரிட்டால் சக்ரவர்த்தி திருமகனும் ஸ்ரீபாஷ்யகாரரும் சேர்ந்தாற்போல் வீதி புறப்பாடு நடக்கும்—இது கோயிலின் அனாதி ஆசாரம்.

இந்த உத்ஸவங்களைத் தவிர ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி வருஷத்திற்கு ஒரு தரம் சைதாப்பேட்டைக்கு அருகில், அடையாற்றின் கரையிலுள்ள "ஈக்காட்டுத் தாங்கல்" என்னும் கிராமத்திற்கு எழுந்தருளுகிறார். ஸூர்யோதயத்திற்கு முன்பாகவே கோவிலை விட்டுப் புறப்பட்டு, மைலாப்பூர், ஆழ்வார்பேட்டை, மாம்பலம் வழியாக எழுந்தருளி, ஈக்காட்டுத் தாங்கலில் திருமஞ்சனம் கண்டருளி, சாயந்திரம் அடையாற்றில் 'திரு ஊறல்' உத்ஸவம் ஆன பிறகு, ஸன்னதிக்குத் திரும்பி எழுந்தருளுகிறார்.

கடைசியாக ஒரு சுயவிக்ஞாபனம். அடியேன் பால்யம்முதல் இந்த திவ்யதேச வாசியாயிருந்து, ஸ்ரீபார்த்தஸாரதியின் பரிபூர்ண க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரமாயிருக்கிறேன். இந்த எம்பெருமானை போட்டோ பிடிக்கக்கூடாதென வெகு நிர்ப்பந்தங்களிருந்தும் அடியேன் அனேகரின் உதவியால் இந்த திவ்ய க்ரந்தத்தில் உள்ள அனேக உன்னதமான அவசரங்களைப் போட்டோ பிடிக்க ஸ்ரீபார்த்தஸாரதி கடாக்ஷித்தருளினர். இந்த மேன்மையான படங்கள் சகலருக்கும் எவ்வாறு உபயோகமாகும் என்று நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, எனது ஆப்த நண்பரும், ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னதி அர்ச்சக மிராசுதாரருமான ஸ்ரீநெம்மிலி அனந்தபட்டாசாரியார், இந்த திவ்யதேசத்து ஸ்தலபுராண ஓலைச் சுவடியைக்காட்டி, இதை நாம் பிரசுரிக்கலாமென்று வற்புறுத்தினர். இதன் காரணமாக இந்த க்ரந்தத்தை சமீபத்தில் பரமபதித்த வித்வான் ஸ்ரீ அ. வி. நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமியின் உதவியைக் கொண்டு தமிழில் எழுதிப் பொழிப்புரையும் செய்தேன். இவைகளைப் ப்ரசுரிக்க உத்தேசித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னதி தர்மகர்த்தாவும், எனது நீண்டகால நண்பருமான ஸ்ரீவானமாமலை வீரராகவாசாரியார் ஸ்வாமி இதை தேவஸ்தான வெளியீடாகவே பிரசுரிப்பதாக முன்வந்தார். ஆகையால் அடியேன் உடனே இந்த க்ரந்தங்கள், என்னிடமிருக்கும் ஸ்ரீபார்த்தஸாரதி முதலிய எம்பெருமான்களின் எல்லா போட்டோக்கள் சகலத்தையும் அவருக்குக்காட்டி இந்தப் பிரசுரம் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமியின் திவ்ய சரணாரவிந்தங்களில் ஈடுபட்டுள்ள அனேக பக்த பாமரர்களுக்கு உபயோகப்படும்படி ஸமர்ப்பித்தேன். எல்லாம் கீதாசாரியனின் லீலா விநோதங்களே. இந்த க்ரந்தம் கூடிய சீக்கிரம் ப்ரசுரமாகி வெளிவர அடியேனால் முடிந்தவரையிலும் சகாயம் செய்ய பலத்தையும் உத்ஸாகத்தையும் அந்த லோகாசாரியரான ஸ்ரீபார்த்தஸாரதியே தந்தருளியதற்கு அடியேன் அவரிடம் எனது சொல்லமுடியில்லா க்ருதக்ஞதையைச் செலுத்தயியலாதவனாயிருக்கிறபடியால் அதையும் அவரே க்ஷமித்தருளவேண்டுமென்று ஸதா பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீப்ருந்தாரண்ய நிவாஸாய பலராமாநுஜாயச |
ருக்மிணீ ப்ராணநாதாய பார்த்த ஸூதாய மங்களம் ||

ப்ரஹ்மோத்ஸவம்—முதல் நாள்



தர்மாதிபீடம் PHOTO BY T. N. SRINIVASAN

ப்ரஹ்மோத்ஸவம் இரண்டாம் நாள்



சேஷவாஹனம் PHOTO BY T. N. SRINIVASAN

முன்னுரை

ஸ்ரிய:பதியாய் அபாரகாருணிகனான ஸர்வேஸ்வரன் ப்ரளயகாலத்திலே உரைமெழுக்கிற் பொன்போலே மூலப்ரக்ருதியில் அழுந்தியிருக்கிற ஆத்மவர்க்கங்களைப் பார்த்து, தயமானமனுவாய்க்கொண்டு "பல்லுயிர்க்கும ஆக்கை கொடுத்தளித்த கோனே" என்கிறபடியே அவைகள் கரைமரஞ்சேரும்படி அவற்றிற்குக் கரணகளேபரங்களைக் கொடுத்தருளினான். "தன்னை வணங்கவைத்த கரணமிவை" என்றும், "மலர்நாடி நாடோறும் நாரணன் தன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்றும் சொல்லுகிறபடியே தன்னையடைந்து உஜ்ஜீவித்தற்காகக் கொடுத்த கரசரணாதி அவயவங்களைக்கொண்டு அந்த எம்பெருமான் நினைவின்படி நடவாதே அந்த ஆத்துமாக்கள் ஆக்கையின் வழியுழன்று ஶப்தாதி விஷயப்ரவணங்களாய், யாற்றைநீந்தக்கொடுத்த தெப்பத்தைக் கொண்டு அக்கரையேறாதே நீர்வாக்காலே கடலிற்புகுவாரைப்போலே கர்மப்ரவாகத்தாலே பிறவிக்கடலிலே புக்கு அநர்த்தப் படுவனவாயின. அது கண்டு தயாளுவான பகவான் "கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் நீர்மையினாலருள்செய்து" என்றும், "தொண்டே செய்தென்றும் தொழுது வழியொழுகப், பண்டே பரமன் பணித்த பணிவகை" என்றும் சொல்லுகிறபடியே தன் பேரருளினால் "துர்லபோ மாநுஷோ தேஹ:", "அரிதரிது மானிடராத லரிது" என்கிறபடியே அரியஜந்மாக்களாய் ஆறறிவுயிரான மநுஷ்யர்களின் பொருட்டு ஶாஸ்த்ரப்ரதானம் பண்ணினான். அப்போதும் அவர்கள் ஆத்மாபஹாராதிகளைப் பண்ணிக் கொண்டு நன்னெறி யல்லா நெறியிலே செல்வதுகண்டு, பர வ்யூஹ அந்தர்யாமி ரூபங்களைக் கொண்டுள்ள ஸர்வேஸ்வரன் ஓலைப்புறத்துச் செல்லாத நாட்டை எடுத்து விட்டுக் குறும் பறுக்கும் ராஜாக்களைப்போலே "நாமே போய் இவர்களை வாரிப்பிடியாகப் பிடித்துக் கொண்டுவரவேணும்" என்று ராம க்ருஷ்ணாதியான விபவ அவதாரங்களைப் பண்ணிப் படாதனபட்டுத் திருத்தப்பார்த்தும், அப்பரமனது பெருமையை யறியமாட்டாதே அந்த அவதார மூர்த்ததைத் தம்மைப்போன்ற மானுடமாகவே எண்ணி அவமதித்தும் எதிரம்புகோத்தும் கேட்பார் செவிசுடு கீழ்மைவசவுகளே வைதும் ஆஸுரப்ரக்ருதிகளாய் அவனைக் கிட்டாமை யன்றிக்கே "த்வம் மே" என்றால் "அஹம்மே" என்று எதிரிட்டுக் கொண்டு தாழ்கதிகளிலே விழுகிறபடியைக் கண்டான். "விஜாதீயனான நம்மால் இவர்களைத் திருத்தவொண்ணாது" என்று பார்த்து, பார்வைமிருகத்தைக்கொண்டு மிருகம் பிடிப்பாரைப் போலே மநுஷ்ய ஸஜாதீயரான ஆழ்வாராதிகளைக் கொண்டு ஜகத்தைத் திருத்தவேணுமென்று திருவுள்ளம்பற்றி, தனது திவ்யாபரணங்களென்ன திவ்யாயுதங்களென்ன இவை முதலானவற்றைக் கடாட்சித்து அவதரிக்குமாறு நியமிக்க, அவர்களும் த்ராவிடபூபாகத்திலே நாநாவர்ணங்களில் அவதரித்துள்ளார் சிலரிடத்து ஆவேசித்து நிற்க, ஸர்வேஸ்வரனும் அப்படிப்பட்டவர்க்கு மயர்வறமதிநலமருளி அவர்கள் மூலமாக ஸர்வாதிகாரமான த்ராவிட ப்ரபந்தத்தை ப்ரகாசிப் பித்தருளினான்.

அப்படி ஆவிர்ப்பவித்த ஆழ்வார்களால் மங்களாஶாஸநம் செய்யப்பெற்ற திவ்ய க்ஷேத்ரங்கள் உகந்தருளினநிலங்கள் என்று நம்மாசார்யரால் பாராட்டப்படும். அப்படி பாராட்டப்பெற்ற திவ்ய ஸ்தலங்கள் நூற்றெட்டு. "ஈரிருபதாஞ்சோழம் ஈரொன்பதாம் பாண்டி, ஓர்பதின் மூன்றாம்மலைநாடு ஓரிரண்டாம், சீர்நடுநாடு ஆறோடீரெட்டுத் தொண்டை யவ்வடநாடு ஆறிரண்டு, கூறு திருநாடு ஒன்றாக்கொள்" என்ற வெண்பாவினால், பிள்ளைப் பெருமாளையங்கார் சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பது என்றும், பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு என்றும், மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று என்றும், நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு என்றும், தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு என்றும், வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டு என்றும், திருநாடு ஒன்று என்றும் கூறியதுமன்றி, அந்த நூற்றெட்டுத் திருப்பதிகளையும் நூற்றெட்டுவெண்பாக்களாற் பாடியுள்ளார். வேதாந்த தேஶிகனும் இந்த நூற்றெட்டுத் திவ்ய தேஶங்களையும் புகழ்ந்து மங்களாஶாஸநஞ் செய்தருளி யுள்ளார். இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளில் வ்யூகமூர்த்தி எழுந்தருளியுள்ள திருப்பாற் கடலும், பரத்துவநிலையான திருநாடும் தவிர, மற்றை நூற்றாறு திருப்பதிகள்

சேதநர்க்கு இஹலோகத்தில் தரிசித்து அநுபவித்தற்கு உரியனவாகும். இப்படியான அர்ச்சையையே "பின்னானார் வணங்குஞ்சோதி" என்று திருமங்கை மன்னன் போற்றியுள்ளார். மற்றும் "இதுதான் ஶாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக்கடவதாய், ருசி பிறந்தால் உபாயமாய், உபாயபரிக்ரகம் பண்ணினால் ஸ்லாக்யமுமாயிருக்கும்" என்று நம் பிள்ளை லோகாசார்யரும் அருளிச்செய்துள்ளார். ஆகவே, நமக்குத் தஞ்சமாவது அர்ச்சாவதாரமே யென்பது திண்ணம். இவ்விஷயத்தையே ருஷிகளும் "ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்" என்று பேசியுள்ளார்: விழிப்பான அறிவில்லாதார்க்கு, அர்ச்சையிலே (நன்மை விளையும்) என்பது, இதன் தாத்பர்யம்.

ப்ரக்ருதம் ராஜதானீ நகரமான சென்னையிலிருப்பதும் "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று புகழப்படுகிற தொண்டைநாட்டுத் திருப்பதியுமான திருவல்லிக்கேணியென்ற இந்தத் திவ்யதேஶம், "கோயில் திருமலை பெருமாள்கோயில்" என்று ஸ்ரீவைஷ்ணவர்களால் பாராட்டிப் பேசப்படுகிற திவ்யதேசங்களின் எம்பெருமான்களைக் கொண்டுள்ளது. எங்ஙனேயென்னில்?—ஸ்ரீரங்கநாதனே, மந்நாதனென்று பேர்பூண்டு ஶயநத் திருக்கோலமாக ஸேவை ஸாதிக்கிறார்: இவரே இந்தத் திவ்யதேஶத்திலெழுந்தருளியுள்ள பஞ்சமூர்த்திகளுள்ளும் பிராதாநமானவர்: இது இந்த ஸ்தலத்தில் திருவவதரித்தவராகிய பேயாழ்வாருடைய ஶிஷ்யரான பக்திஸாரரென்கிற திருமழிசைப் பிரான் அருளிச்செய்த "தாளால் உலகமளந்த அசைவேகொல், வாளாகிடந்தருளும் வாய்திறவான், நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான், ஐந்தலைவாய் நாகத்தணை" என்ற நான்முகன் திருவந்தாதிப் பாசுரத்தால் விஶதமாம்: ஸ்தலபுராணத்தாலும் இந்த விஷயம் தெளிவுபெறும். திருவேங்கடமுடையானே வேங்கட க்ருஷ்ணன் என்று திருநாமம் பூண்டு தன்னை ஸேவிப்பார்க்கு அந்தத் திருவேங்கடமுடையானது ஸ்மரணம் உண்டாகும்படி அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பனாய் ஸேவை ஸாதிக்கிறார். இந்தப்பெருமான் முமுக்ஷுக்களுக்குப் பரமோத்தேஶ்யமான சரமஶ்லோகத்தைப் பார்த்தனை வியாஜமாகக் கொண்டு ப்ரஸாதித்த கீதாசார்யனாய், "கோல் கையிற்கொண்டு பார்த்தன் தன் தேர்முன்னின்ற" பார்த்தஸாரதியாகவும் இருப்பது, பின்னும் ஓரேற்றமாம். இந்த எம்பெருமானே எம்பெருமானார் என்றும் உடையவரென்றும் பாராட்டப்படுகிற நம் தர்ஶநஸ்தாபநாசார்யரின் திருவவதாரத்துக்கு ஹேதுபூதராவர். பேரருளாளனை வரதனே தன்னுடைய நாமாவுக்கு ஏற்றபடி "அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜம் ஆரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ் த்வராயை நம:" என்கிற பாராட்டுக்குத் தக கஜேந்த்ரவரதனை மூலமூர்த்தியாகவும் அபயஹஸ்தத்துடன் வரத ஹஸ்தத்தையும் கொண்ட உத்ஸவமூர்த்தியாகவும் ஸேவை ஸாதிப்பதும் இந்தத் திவ்யதேஶத்திலேயுள்ள தொன்றாம்: ஆகவே, கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்ற மூன்று திவ்யதேஶங்களையும் இங்கே ஒருங்கே காணலாம். மற்றும் "எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து, இங்கில்லையாலென்று இரணியன் தூண்புடைப்ப, அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றிய என், சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே" என்று நம்மாழ்வார் ஈடுபட்டருளிய சிங்கப்பிரானை "பள்ளியிலோதி வந்ததன் சிறுவன் வாயிலோராயிர நாமம், ஒள்ளியவாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப், பிள்ளையைச்சீறி வெகுண்டு தூண்புடைப்பப் பிறையெயிற்றனல் விழிப் பேழ்வாய்த், தெள்ளியசிங்க மாகியதேவைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே" என்றும், "கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்று விபவாவதாரங்களில் வைத்துக் கொண்டு ஆழ்வாரின் ஈடுபாட்டிற்கு எல்லைநிலமான சக்ரவர்த்தித் திருமகனை "பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும், இரவு நன்பகலும் துதிசெய்யநின்ற இராவணாந்தகனை யம்மானை, குரவமே கமழும் குளிர்பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால, இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத் திருவல்லிக்கேணிக் கண்டேனே" என்றும் திருமங்கைமன்னன் மங்களாஶாஸநம் செய்தருளியுள்ளார்: இந்தத் திவ்யதேஶத்தை ஆழ்வார்கள் நேரே வந்து ஸேவித்து மங்களாஶாஸநம் செய்தருளினார்கள் என்பது அந்தப் பாசுரங்களின் பொருளை ஆராய்வதால் நன்குதெரியலாம். மேலும் இந்த திவ்யதேசம்

முதலாழ்வார்களில் "பேயரே யெனக்கு யாவரும் யானுமோர், பேயனே யெவர்க்கும் இது பேசியென்" என்று சாமானியமனிதரைப் பேய்போல எண்ணித் தனிப்பட்டு ஒழுகியதனால் உலகோரால் 'பேயன்' என்றும், ஞானிகள் ஞானபரிபாகத்தைக் கண்டு 'மஹாந்' என்ன அதனால் மஹாந் என்றே சாதுக்களின் ஸமூஹத்தில் பேர்படைத்துமுள்ளவரான பேயாழ்வாரின் திருவவதாரஸ்தலமுமாகும்: எவ்வாறெனில்?—"மயிலைத் திருவல்லிக்கேணி" என்றும், "மாமயிலை மாவல்லிக்கேணி" என்றும் திருவல்லிக்கேணியை மயிலையோடு சேர்த்துக் கூறுதல் மரபு ஆதலாலும், திருவல்லிக்கேணி என்ற நாமதேயத்துக்கு நிரூபகமான அல்லிமலரினின்றுமே பேயாழ்வார் திருவவதரித்தாரென்பது "ஜாதம்...மணிகைரவாந்தாத்" என்பதிற் பெறப்படுவதாலும், இங்கு எழுந்தருளியுள்ள ஆழ்வார்க்குப் பத்துநாளை யுத்ஸவமும் விடாயாற்றியும் இன்றைக்கும் நடந்துவருவதோடு தனிக்கோயிலும் அதன் நிர்வாகமும் ஸமீபகாலம் வரையில் தனிப்பட நடந்துவந்திருத்தலாலும், முதலாழ்வார்களில் மற்றையிருவரும் யதோக்தகாரியையும் தலசயனத்துறைவாரையும் சார்ந்து திருவவதரித்திருப்பது போலவே, இவ்வாழ்வாரும் பள்ளிகொண்ட மந்நாதனைச் சார்ந்தே திருவவதரித்தவ ரென்று அறிஞரான பெரியோர் சொல்லக்கேட்டிருப்பதாலுமாம். மற்றும் இந்தப் பேயாழ்வாருடைய ஸிஷ்யரான திருமழிசைப் பிரான் இந்த க்ஷேத்ரத்தில் சில நூற்றாண்டுகள் யோகத்திலெழுந்தருளியிருந்தாரென்று ஐதிஹ்யமும் உண்டு.

இப்படி ஏற்றம்பெற்ற இந்தத் திவ்யதேசத்தினுடையவும் மூர்த்திகளினுடையவும் தீர்த்தங்களினுடையவும் பெருமைகளையெல்லாம் பரக்கப்பேசுவது, ப்ரஹ்மாண்ட புராணாந்தர்கதமான ப்ருந்தாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்ய மென்பது: இதற்கு முன்னரே மணிப்ரவாள ரூபமான வ்யாக்யானமும் இட்டு அந்த புராண படனம் ப்ரதி வருஷமும் பங்குனி மாதத்தில் நடக்கும் பல்லவோத்ஸவத்தில் மன்னாதன் முன்னிலையில் ஸேவிக்கப்பட்டும் வருகிறது. "இவ்வாறுள்ள இந்த ஸ்தலபுராண ஸ்ரீகோசம், இந்த திவ்யதேஸத்தின் மாஹாத்ம்யத்தை அறிந்துகொள்ளவேணுமென்கிற ஆஸ்திகர்க்கு மிகவும் உபயோகமாகும்படியும் மற்றும் ஸுப்ரபாதம் முதலியன சேர்க்கப்பட்டும் எம்பெருமான் திருவுருவப்படங்கள் அமைந்தும் நல்ல ரீதியில் அச்சிடப்பட்டுள்ளது. இதிலடங்கிய விஷயங்களையெல்லாம் விஷய சூசிகை முதலியவற்றால் தெளியலாம். இது மஹான்களுக்கு ஆமோதஸ்தாநமாய் நல் விருந்துமாகும்.

இந்த ஸ்தலத்தில் ப்ராசீநவாஸிகளாகி ஸ்ரீ உ.வே. வானமாமலை சடகோபாசார்யர் ஸ்வாமி முதல் நான்குதலைமுறையாகவே இந்த ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி தேவஸ்தாநத்தில் தர்மகர்த்தாவாக வருபவர்களும் ஷை ஸந்நிதியின் அபிவ்ருத்தியில் மிகுந்த ஊக்கங்கொண்டிருப்பவர்களுமாகிய ஸ்ரீவானமாமலை குடும்பத்தவரான தர்மகர்த்தா ஸ்ரீமாந் வா. வீரராகவாசார்யர், பி. ஏ. பி. எல் அட்வோகேட் இந்த ஸ்தலபுராணம் நல்ல ரீதியாக அச்சிடப்பட்டு வெளிவரவேண்டுமென்று பெருமுயற்சியெடுத்துக்கொண்டு பாடுபட்டனர். அதனால் இந்த ஸ்தலபுராணம் மிகவும் சிறந்தமுறையில் வெளிவந்துள்ளதால் ஆஸ்திகர்கட்கெல்லாம் பரம ஸந்தோஷத்தையுண்டாக்குமென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யன்.

ப்ரஹ்மோத்ஸவம் மூன்றாம் நாள்



கருடசேர்வை

திருவல்லிக்கேணி விஷயமாக ஆழ்வார்களின் மங்களாஸாஸநப் பாசுரங்கள்

பேயாழ்வார்-மூன்றாந்திருவந்தாதி 16-ம் பாசுரம்

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம்*
அந்தி விளக்கு மணிவிளக்காம்*—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன்*
திருவல்லிக்கேணியான் சென்று.

*ஒரு அல்லிதாமரையாள்—*அழகிய இதழ்களை உடைய தாமரைப் பூவை இருப்பிடமாகவுடைய பிராட்டி.* சென்று ஒன்றியசீர் மார்பன்—*வந்து பொருந்திய அழகிய திருமார்பையுடையவனும்.* வந்துதைத்த வெண்திரைகள் செம்பவளம்வெண்முத்தம்—*வந்து வீசுகின்ற வெளுத்த அலைகளிலுண்டான சிவந்த பவழங்களும் வெளுத்த முத்துக்களும்.* அந்தி விளக்கும் அணிவிளக்கு ஆம்—*ஸந்தியாகாலத்தை விளக்குகின்ற மங்கள தீபங்களாக ஆகப்பெற்ற.* திருவல்லிக்கேணியான்—*திருவல்லிக்கேணியில் எழுந்தருளி யிருப்பவனுமான பெருமான்.* எந்தை—*எனக்கு ஸ்வாமி.*

திருப்பாற் கடலில் நின்றும் தம் திருவுள்ளத்துக்கு வரும்போது திருவல்லிக்கேணியில் தங்கி வந்தானென்கிறார் போலும். முதலிரண்டடிகள் திருவல்லிக்கேணிக்கு விசேஷணம். அருகிலுள்ள கடலில் அலைகள் மோதும்போதும் சிவந்த பவழங்களும் வெளுத்த முத்துக்களும் கொழிக்கப் படுகின்றன. அவை ஸாயம் ஸந்தியா காலத்தில் ஏற்றப்படுகின்ற மங்கள தீபமோ என்னலாம்படி யிருக்கின்றனவாம். சில விளக்குகள் செந்நிறமான ஒளியை யுடையன வாயும் சில விளக்குகள் வெண்ணிறமான ஒளியை யுடையனவாயும் இருப்பதுண்டாகையாலே செந்நிற பவழங்களும் வெண்ணிற முத்துக்களும் திருவிளக்காகச் சொல்லப் பட்டன. திருவல்லிக்கேணியில் எப்போது பார்த்தாலும், திருவிளக்கேற்றப் பெற்ற மாலைப் பொழுதாகவே காணப்படுமென்று கருத்து. இப்படிப்பட்ட திருவல்லிக்கேணியில் எழுந்தருளி யிருக்கின்ற திருமாமகள் கொழுநன் எனக்கு ஸ்வாமி—என்றாயிற்று.

திருமழிசையாழ்வார்—நான்முகன் திருவந்தாதி 35-ம் பாசுரம்

தாளாலுலக மளந்த வசவே கோல்*
வாளா கிடந்தருளும் வாய்திறவான்*—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்*
ஐந்தலைவாய் நாகத்தணை.

*நீள் ஓதம்—*பெரிய அலைகள்* வந்து அலைக்கும்—*கரையிலே* வந்து *வீசப்பெற்ற* மா மயிலை—*மயிலாபுரிக்கு அடுத்த* மா வல்லிக்கேணியான்—*திருவல்லிக்கேணியில் நித்யவாஸம் பண்ணுகின்ற ஸர்வேச்வரன்* ஐ தலை வாய் நாகத்து அணை—*ஐந்து தலைகளையும் ஐந்து வாய்களையு முடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே* வாளா—*வெறுமனே* கிடந்தருளும்—*சயனித்திரா நின்றான்* வாய்திறவான்—*வாய்திறந்து ஒன்றுமருளிச் செய்வதில்லை. (இப்படி யிருப்பதற்குக் காரணம்)* தாளால்—*திருவடியாலே* உலகம் அளந்த அசவே கோல்—*உலகங்களை அளந்ததனாலுண்டான ஆயாஸமோ?*

திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாளாக நின்ற திருக்கோலமாய் ஸேவை ஸாதிப்பது தவிர, நாகத்தணைக்கிடந்த பெருமானாக ஸேவை ஸாதிக்கிற திருக்கோலமும் உண்டாகையாலே அந்த திவ்ய மங்கள விக்ரஹத்திலீடுபட்டுப் பேசுகிற பாசுரம் இது.

அர்ச்சாவதாரங்களில் எம்பெருமான்கள் நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் ஒருபடிப் பட்டேயிருக்குமேயன்றி ஒரு நாளும் மாற மாட்டாதென்பதும் ஒரு நாளும் சோதிவாய் திறந்து பேசியருள்வதில்லை யென்பதும் ஆழ்வார்கட்குத் தெரிந்திருக்கச் செய்தேயும் கரை புரண்ட பிரேமத்தின் கனத்தினால் அர்ச்சாவதார ஸமாதியையும் குலைத்துப் பரிமாறப்பார்ப்பர்கள். நம்மாழ்வார் திருவாய் மொழியில் “கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடி

யும், மடியாதின்னே நீதுயில் மேவி மகிழ்ந்ததுதான், அடியாரல்லல் தவிர்த்த வசவோ? அன்றேல் இப்படிநான் நீண்டுகாவிய அசவோ பணியாயே" (8-3-5) என்றும், "கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலங்கிடத்தி உன் திருவுடம்பசையத், தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமை வழிவருந் தொண்டரோர்க்கருளித், தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீ யெழுந்துன் தாமரை மங்கையும் நீயும், இடங்கொள் மூவுலகுந் தொழ விருந்தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே!" (9-2-3) என்றும் அழகாகப் பேசினார். இவ்வாழ்வார் தாமும் திருச்சந்த விருத்தத்தில் "நடந்த கால்கள் நொந்தவோ?......காவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே! (812)" என்றார். அப்படியே இப்பாசுரத்திலும் சோதிவாய் திறந்து ஒரு வார்த்தையும் அருளிச் செய்ய மாட்டாமல் நெடுங்காலமாகவே அரவணையின் மேல் ஏகரீதியாக எம்பெருமான் பள்ளிகொண்டிருக்கிறானே!, காடும் மேடும் கல்லும் கரடுமான பூமியை முன்பொருகால் அடியிட்டு அளந்தருளினதாலுண்டான ச்ரமம் இன்னும் ஆறவில்லை போலும்; என்கிறார். பேசாதே வாளா கிடந்தருள்வதும் நீர்க்கரையைப் பற்றிக் கண் வளர்ந்தருள்வதும் ஆயாஸத்தின் மிகுதியினால் என்றிருக்கிறார் போலும். திருவல்லிக்கேணியென்பது தொண்டைமான் சக்ரவர்த்தியின் ப்ரார்த்தனையின்படியே திருவேங்கடமுடையான் கண்ணனாகத்தனது குடும்பத்தோடு ஸேவை ஸாதித்த தலம். இத்தலத்துப் புஷ்கரிணி அல்லிப்பூக்கள் நிறையப்பெற்றதனால் கைரவிணியென்று வடமொழியிலும் திருவல்லிக்கேணியென்று தென்மொழியிலும் பெயர்பெறும். இந்தப்புண்ணிய தீர்த்தத்தின் பெயரே இத்தலத்துக்குப் பெயராயிற்றென்றுணர்க. இது மயிலையை அடுத்திருக்கிறபடியால் 'மாமயிலை மாவல்லிக்கேணி' எனப்பட்டது.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 2-ம் பத்து 3-ம் திருமொழி—விற்பெருவிழவும் பிரவேசம்

ப்ரவேசம்—ஆஶ்ரித விரோதி நிரஸந சீலனாய், ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனாய், ஆஶ்ரிதஸுலபனாய் இதர விஸஜாதீயனாயிருக்கிற ஸர்வேஶ்வரன், இக்குணங்கள் தான் தர்மியநுவர்த்திக்கிறவோபாதி எங்கு மநுவர்த்திக்கு மவையிறே. இப்படியிருக்கிறவன், மநுஷ்யராயிருப்பார், புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டாஶ்ரயிக்கலாம்படி வந்து கிடந்த மாத்ரமன்றிக்கே, ஒரு திர்யக்கு இப்பூவிற் செவ்வியழியாதபடி திருவடிகளிலே பணிமாற வேணுமென்று இடர்பட அவ்விடரைத் தீர்க்கைக்காக அது இடர் பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்து அத்தையாற்றி இன்னமுமிப்படி இடர் படுவாருண்டோ! என்று சாய்ந்தருளினான், கண்டேனென்கிறார்.

அரும்பதம்:—கீழ்த்திருமொழியில இவரை வசீகரித்த ராமக்ருஷ்ணாவதாரங்களும் **திருவெவ்வுள்** கிடையழகுதானும் சிங்கவேழ்குன்றத்தில பரிபூர்ணமாக அநுபவித்த அழகியசிங்கரும திருவேங்கடத்தில் *திண்கைமாதுயர் தீர்த்தபடியுமாக இவையனைத்தையும் *தேனும,பாலும் நெய்யும கன்னலுமமுதுமொரு கலத்திலே சேர்ந்தால் பருகுமாபோலே இவர்க்குக் கண்ணாலே பருகலாம்படி திருவல்லிக்கேணியில் ஐவகைப் பட்டிருக்கிற இருப்பை எவ்வுள் கிடந்தவன் ஸாவஸ்வதாநம் பண்ணக்கண்டு அநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. இந்த ஸங்கதி தன்னை ஸூசிப்பிக்கிறார—**ஆச்ரிதேத்யாதி ஸர்வேஶ்வரன்** என்றவநந்தரம், இக்குணங்களோடே கூடத் திருவல்லிக்கேணியிலிருப்புகளைக் காட்டிக் கொடுத்தான் என்று பூரிப்பது. இந்த குணங்களைக் கீழ்த்திருமொழியிலநுபவித்தாரே, இங்குமநுபவிக்கவேணுமோவென்ன, அருளிச்செய்கிறார—**இக்குணங்கள்தானித்யாதி.**

"இண்டை கொண்டு" என்கிற பாட்டையும், மேல் "மீனமர் பொய்கை" என்கிற பாட்டையும் கடாக்ஷித்து ஸங்கத்யந்தரமருளிச் செய்கிறார்—**இப்படியித்யாதி.** அதாவது ஐந்து திருப்பதியையும் ப்ராதாந்யேந அநுபவித்தாரென்று கீழ் ஸங்கதியாய், இப்போது திருவெவ்வுளில் கிடையழகையே அநுபவித்தாராகையாலே திருவல்லிக்கேணியிலே சாய்ந்தருளின *என்னையாளுடையப்பனையநுபவிக்கையை ப்ரதாநப்ரமேயமாக்கி, அதுக்கு உத்ரோத்தரம் குணாதிக்யம் தோற்றும்படி மற்றைத் திருப்பதிகளையுமநுபவித்துக்கொண்டு *இண்டைகொண்டு தொண்டரேத்தினமையையும் காட்ட *ஆனையின் துயரம் தீர்த்தபடியையநுபவிக்கிறாரென்றருளிச் செய்கிறாரென்கை.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார்—பெரியதிருமொழி 2-ம் பத்து ௩-ம் திருமொழி

விற்பெருவிழவும்—பதிகம்

(பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யாநம்)

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்*
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த சிவனுறு துயர்களை தேவை*
பற்றலர்வீயக் கோல் கையில்கொண்டு பார்த்தன் தன்தேர் முன் நின்றானைச்*
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 1

வில்பெருவிழவும்	தனுர்யாகமஹோத்ஸவமும்
கஞ்சனும்	கம்ஸனும்
மல்லும்	சாணூரமுஷ்டிகராகிற மல்லவர்க்கமும்
வேழமும்	குவலயாபீடமென்னும் யானையும்
பாகனும்	யானைக்காரனும்
வீழ	விழும்படி
செற்றவன் தன்னை	ஸம்ஹரித்தவனாய்
புரம்எரி செய்த	த்ரிபுரதஹனம் பண்ணின
சிவன்	ருத்ரன்
உறு	அடைந்த
துயர் களை	குருபாதக பீடையை போக்கின
தேவை	ஸ்வாமியாய்,
பற்றலர்வீய	சத்ருக்கள் நசிக்கும்படி
கோல்	முட்கோலை
கையில் கொண்டு	கையிலே பிடித்துக்கொண்டு
பார்த்தன் தன்	அர்ஜுநனுடைய
தேர்முன்	தேர் முன்னே
நின்றானை	ஸாரதியாய் நின்றவனாய்,
சிற்றவை பணியால் முடி துறந்தானை	மாற்றுத்தாயான கைகேயியுடைய சொல்லைக் கொண்டு ப்ராப்தமாய் வருகிற கிரீடத்தை ஸந்ந்யஸித்தவனான
	ஸ்ரீ பார்த்தஸாரதியை
திருவல்லிக்கேணி கண்டேன்	திருவல்லிக்கேணியிலே காணப் பெற்றேன்.

பெ. வ்யா—முதற் பாட்டு. விற்பெருவிழாவாயிற்று—ஶத்ருநிரஸநம் பண்ண நினைக்கிறானகையாலே, பெருக்கக் கோலினானாயிற்று; அத்தைக்கோலின கம்ஸனும், அவனுக்கு பலமாய் மலை துள்ளினாற் போலே பெரிய கிளர்த்தியோடே கூடின மல்லவர்க்கமும், அவர்கள் பார்க்கிலும் கண்பாராதே இடையற வீசும்படி மதிப்பித்து வழியிலே நிறுத்தின ஆனையும், அத்தைத்தள்ளினாலும் அது தன்னை உயிர்ப்புள்ளது போலே நடத்தவல்ல பாகனும் (வீழச்செற்றவன்றன்னை) ஏகோத்யோகத்திலே நிரஸித்தாற்போலே வினை செய்த சடக்கு. (புரமித்யாதி) த்ரிபுரதஹநாபதாநத்தாலே ஸஞ்ஜாதாபிமானனான ருத்ரன், பிதாவுமாய் லோககுருவுமாயிருக்கிறவன் தலையையறுத்துப் பாதகியாயிருக்கும்; "மதிப்பனாயிருக்கிறவன் எளிவரவுபட வொண்ணாது" என்று அத்தைப்போக்கி, அத்தாலே, லோகத்துக்கெல்லாம் தானே ஆஶ்ரயணீயனென்னு மிடத்தை வெளியிட்டவன். "தத்ர நாராயணஃ ஶ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசிதஃ| விஷ்ணு ப்ரஸாதாத்"—ஸர்வேஶ்வரன் ப்ரஸாதத்தாலே. "ஸுஶ்ரோணி" அவனைக்கிட்டுகையாலே உன் வடிவழகு ஸபலமாகப் பெற்றதிறே என்கிறான். (பற்றலரித்யாதி) பற்றலருண்டு சத்ருக்கள், அவர்கள் முடிந்துபோம்படி, "ஆயுதமெடுக்க வொட்டோம்" என்றவாறே குதிரைகளை நடத்தும் கோலைக்கையாலே கொண்டு. (பார்த்தன்தன் தேர் முன் நின்றானை) ரதியைச்சீறினால் ஸாரதியையிறே அழியச் செய்வது. அவனைப்பின்னே இட்டுத்தன்னை அம்புக்கிலக்காக்கி நின்றவனை. (சிற்றவை பணியால் முடி துறந்தானை) மாற்றுத்தாய் சொன்ன வார்த்தைக்காக, ப்ராப்தமாய் வருகிற முடியை ஸந்யஸித்தவனை. [நநூநம் மம கைகேயி] "சக்ரவர்த்தி வார்த்தை சொல்ல மாட்டாமையிருக்கிறானத்தனை. உம்முடைய தம்பிக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான், உம்மைக்காடேறப் போகக்காணுமவன் நினைத்திருப்பது" என்று சக்ரவர்த்தி கருத்தைச் சொல்ல; அதைக் கேட்டு "நடு விலாய்ச்சி! திருவடிகளிலே அழகிதாக ஶுஶ்ரூஷித்தோ மென்றிருந்தோம், நம்பக்கலொரு குணமுண்டாக நினைத்திராமையிறே தாம் போகச் சொல்லாமே அய்யர் கருத்தாக வருளிச்செய்தது" என்று "ஐயரோபாதியாகவோ உம்மை நினைத்திருப்பது. அவரை ஈஶ்வரராகவும் உம்மை ஈஶ்வரதரையாகவுமிறே நினைத்திருப்பது" என்றாரிறே.

(விற்பெரு விழவித்யாதி) விரோதிவர்க்கத்தைக் கிழங்கெடுக்கு மவனாய், ஈஶ்வராபிமாநிகளுக்குமிடர்வந்தால் போக்கு மவனுமாய், தனக்கு ஸ்நேஹிதரானார்க்காகத் தன்னை அழியமாறுமவனாய், போலியான ஸ்நேஹிகளுக்கும் ஏவிற்றுச்செய்யுமவனானவனைத் திருவல்லிக்கேணியிலே காணப்பெற்றேனென்கிறார். 1

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை விழுமிய முனிவர் விழுங்கும்*
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக் குவலயத்தோர் தொழுதேத்தும்*
ஆதியை அமுதை என்னையாளுடை அப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் *மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 2

வேதத்தை	வேதத்தை விபூதி யாகவுடையவனைப்,
சுவை	(ஆச்ரயிந்தவர்களுடைய) ருசிக்குத்தக்கபடியாக
வேதத்தின்	வேதோக்தகர்மாநுஷ்ட்டாநத்தினுடைய
பயனை	பலத்தைக்கொடுக்குமவனாய்,
விழுமிய	ச்லாக்யரான
முனிவர்	ஸனகாதிமுனிவர்கள்
விழுங்கும்	அநுபவிக்கிற
கோதுஇல்	கோது இல்லாத
இன் கனியை	இனிய பலம்போலே நிரதிசய போக்கியனாய்,
நந்தனார் களிற்றை	ஸ்ரீநந்தகோபர்க்கு ஆனைக்கன்று போலே பிரியனாயிருக்குமவனாய்,
குவலயத்தோர்	பூமியிலுள்ளவர்கள்
தொழுது	ஆச்ரயித்து
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணுகிற
ஆதியை	ஜகத்காரண பூதனாய்
அமுதை	அம்ருதம்போலே போக்யனாய்,
என்னை ஆளுடை	என்னை அடிமைகொண்ட
அப்பனை	உபகாரகனானவனை,
ஒப்பவர் இல்லா	(தங்களுக்கு) ஸத்ருசரானவர்கள்
மாதர்கள் வாழும்	இல்லாத ஸ்திரீகள் வாழுமதாய்
மாடம்	மாடங்களையுடைத்தாய்
மா	செல்வம் நிறைந்த
மயிலை	மயிலாப்பூரைப் படைவீடாகவுடைய
	திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பெ. வ்யா—இரண்டாம்பாட்டு. (வேதத்தை) “த்ரைகுண்யவிஷயா வேதா:” என்கிறபடியே எல்லார்க்கும் ஹிதஞ்சொல்லப்போந்த வேதத்தைத்தனக்கு விபூதியாகவுடையவன். (வேதத்தின் சுவைப்பயனை) வேதோக்தமான கர்மங்களையநுஷ்டித்து ராஜஸராயும் தாமஸராயும் ஸாத்விகராயு முள்ளார்க்கு அவ்வவருடைய ருச்யநுகூலமாக பலப்ரதாநம் பண்ணுமவன். கர்ம பாவனையாதல் உபயபாவனையாதலன்றிக்கே கேவலம் ப்ரஹ்மபாவனையேயாயிருக்கும் ஸநகாதிகளுக்கு நிரதிசய போக்யனாயுள்ளவனை. *(நந்தனார் களிற்றை) ஸ்ரீ நந்தகோபர்க்குத் தன்னுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களாலே எப்போது மொக்க இனியனானவனை. (குவலயத்தோரித்யாதி.) பூமியிலுள்ளார் “காரணந்து த்யேய:” என்கிறபடியே தன்னையே ஆஸ்ரயிக்கும்படி ஜகத்காரணபூதனாயுள்ளவனை. (அமுதை) அவர்களுக்கு ப்ராப்யனாயுள்ளவனை. அவர்களுக்கு மெல்லாம் புறம்பாயிருக்கிறவென்னை அடிமை கொண்ட உபகாரகனை, (ஒப்பவரில்லாவித்யாதி) “ஒருவல்லித்தாமரையா ளொன்றிய சீர்மார்பன்” என்று பிராட்டி ப்ராதாந்யமேயான ஊராகையாலே பிராட்டி பரிகரமேயாயிற்று. “நாநயோர் வித்யதே பரம்” என்று அவள் பூவிநியும் ஈஸ்வர விபூதியுமாய் இரண்டு கூறுபிறேயிருப்பது. “மயிலாப்பூர்” என்று படை வீட்டுக்குப்பேர். 2

வஞ்சனை செய்யத் தாயுருவாகி வந்தபேய் அலறிமண் சேர*
நஞ்சமர்முலையூடு உயிர் செகவுண்ட நாதனைத் தானவர் கூற்றை*
விஞ்சைவானவர் சாரணர் சித்தர் வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி*
அஞ்சுவையமுதம் அன்று அளித்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 3

வஞ்சனைசெய்ய	(க்ருஷ்ணனை) வஞ்சிக்கைக்காக
தாயுருவாகி வந்த	தாய்வடிவு கொண்டு வந்த
பேய்	பூதனையானவள்
அலறி	கதறிக்கொண்டு
மண் சேர	பூமியிலே விழும்படியாக
நஞ்சு அமர்	விஷம் நிறைந்த
முலை ஊடு	முலை வழியே
உயிர் செக	(அவள்) ப்ராணன்போம்படி
உண்ட	அமுதுசெய்தருளின
நாதனை	ஸர்வ சேஷியாய்
தானவர் கூற்றை	அஸுரர்களுக்கு ம்ருத்யுவாய்
விஞ்சைவானவர்	வித்யாதரர்
சாரணர்	சாரணர்
சித்தர்	ஸித்தர் (முதலான தேவர்கள்)
வியந்து	ஆச்சர்யப்பட்டு
துதிசெய்ய	ஸ்தோத்ரம் பண்ணும்படி
பெண் உருவு ஆகி	பெண் வடிவைக்கொண்டு
அன்று	இந்த்ரன் ப்ரஷ்டைச்வர்யனான காலத்திலே
அம் சுவை	அழகிய ரஸத்தையுடைய
அமுதம்	அம்ருதத்தை
அளித்தானை	தேவதைகளுக்குக் கொடுத்தவனை
	திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பிரமோற்சவம் நான்காம் நாள்



சூரியபிரபை PHOTO BY T N SRINIVASAN

...DRIYA S... LIBRARY, TIRUPATI

பிரமோற்சவம் ஆறாம் நாள்

யானை வாஹனம் PHOTO BY T N SRINIVASAN

வ்யா—மூன்றும் பாட்டு. (வஞ்சனையித்யாதி) தாய் வடிவு கொண்டு வஞ்சிக்க வந்த பூதனை கதறிக்கொண்டுபோய் பூமியிலே விழும்படியாக, விஷம் நிரம்பின முலைவழியே அவளுடைய ப்ராணன்கள் போம்படி அமுது செய்த. (நாதனை) தனக்குச் சேராத வடிவு கொண்டு ஜகத்துக்கு ப்ராணனை தன்னை நலிய வந்தவளை முடித்துத் தன்னைத் தந்தவன். "ஸ்தந்யம்தத்." (தானவர் கூற்றை) ஆஸுரவர்க்கத்துக்கு ம்ருத்யுவானவனை. வித்யாதரர் சாரணர் ஸித்தர் உள்ளிட்ட தேவ வர்க்கமடைய விஸ்மிதராய் ஸ்தோத்ரம் பண்ணும்படி புருஷோத்தமனை தனக்குச் சேராத வடிவைக் கொண்டு அம்ருதத்தை அநுகூலரை புஜிக்கும்படி பண்ணினவனை. 3

இந்திரனுக் கென்று ஆயர்கள் எடுத்த எழில்விழவில் பழநடைசெய்*
மந்திர விதியில்பூசனை பெறுது மழைபொழிந்திடத் தளர்ந்து* ஆயர்*
எந்தம்மோடு இனவா நிரைதளராமல் எம்பெருமான் ! அருளென்ன*
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 4

இந்திரனுக்கு என்று	இந்திரனுக்கு விருந்திடக் கடவோமென்று	எம்பெருமான்!	எமக்கு சுவாமியானவனே!
ஆயர்கள் எடுத்த	இடையர்கள் ஸங்கல்பித்த	எந்தம்மோடு	எங்களுடன்
எழில் விழவில்	அழகியதாக ஸமைத்ததிலே	இனம் ஆநிரை	இனமினமான பசுத்திரளும்
பழநடை செய்	முன்பு செய்து போரும் நெறிதனில்	தளராமல்	நோவுபடாதபடி
மந்திர விதியில்	மந்த்ரோக்தமான படியே	அருள	ரக்ஷித்தருளவேணும்
பூசனை பெறுது	பூஜையை அவன் பெருமையாலே	என்ன	என்று ஆர்த்திக்க
மழை	கல்வர்ஷத்தை	அந்தம் இல்	அளவிட வொண்ணாத படியான
பொழிந்திட	வர்ஷிப்பிக்க	வரையால்	கோவர்த்தன மலையாலே
ஆயர்	இடையர்	மழை	அம் மழையை
தளர்ந்து	மிகவும்நொந்து	தடுத்தானை	பரிஹரித்தவனை
			திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பே. வ்யா—நாலாம் பாட்டு. (இந்திரனித்யாதி) திருவாய்ப்பாடியிலுள்ளார், த்ரைலோக்யேஸ்வரனை இந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக ஆட்டைக்கொரு விருந்திடக்கடவர்களாய், "நாம் பிறந்து வளருகிற ஊரிலே புரோடாசத்தை நாய் தின்றாற்போலே ஒரு தேவதை வந்து புஜிக்கையாவதென்!" என்று, 'நீங்கள் செய்யப் புகுகிறதுதான் என்' என்று கேட்டான்; "நாங்களிந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக விருந்திடப்புகுகிறோம்" என்றார்கள்; "இந்த மலையன்றோ நமக்கும் பசுக்களுக்கும் ஒதுங்க விடமும் தந்து புல்லுந்தருகிறது, ஆரேனுக்குமோ ப்ரத்யுபகாரம் பண்ணுவது, இம்மலைக்கிடுங்கோள்" என்றான்; முகத்தைப் பார்த்து ஒன்றைச்சொன்னால் மறுக்கலாம்படியன்றேயிருப்பது; ஒன்றாகக்கொடு வந்து குவித்தார்கள். (இந்திரனித்யாதி) இந்த்ரனுக்கென்று இடையரெடுத்த வெழிலுடைத்தான விழவில், முன்பு செய்து போரும் படியிலே மந்த்ரோக்தமானபடியே பண்ணுகிற அநுஷ்டானரூபமான பூஜையைப் பெறுமையாலே அவன் பசிக்ராஹத்தாலே கோபித்து மஹாவர்ஷமாக வர்ஷிப்பிக்க; அத்தாலே இடையரானவர்கள் தளர்ந்து, "ரக்ஷகரான வெங்களோடே எங்களுடைய ரக்ஷ்யமான பசுக்களுந்தளராதபடி நோக்கியருளவேணும்" என்ன. இத்தால்—புறம்புண்டான ரக்ஷ்ய ரக்ஷகபாவமும் அப்ரயோஜகமென்றபடி. (அந்தமில்) அந்த மழையினளவல்லாத பெரிய மலையாலே மழையைத் தடுத்து, அப்படியே "ஸந்தததுːக்க வர்ஷிணி" என்கிற என்னுடைய ஸம்ஸாரமாகிற வர்ஷத்தைப் பரிஹரிக்கவந்தவன். ... 4

இன்துணைப்பது மத்து அலர்மகள் தனக்கும் இன்பன் நற்புவிதனக்கு இறைவன்*
தன்துணை ஆயர்பாவை நப்பின்னை தனக்கு இறை மற்றையோர்க் கெல்லாம்
வன்துணை* பஞ்சபாண்டவர்க்காகி வாயுரை தூது சென்றியங்கும்
என்துணை* எந்தை தந்தைதம்மானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 5

இன்	(தன் மனஸ்ஸுக்கு) இனிய
துணை	துணையாய்
பதுமம	தாமரைப்பூவைப் பிறப்பிடமாக வுடைய
அலாமகள் தனக்கும்	பெரிய பிராட்டியார்க்கும்
இன்பன்	போக்யனாய்,
நல் புவிதனக்கு	எல்லாவற்றையும பொறுக்கும தன்மையளான ஸ்ரீ பூமிப் பிராட்டிக்கு
இறைவன்	வல்லபனாய்,
தன் துணை	தன்னையே துணையாக வுடையளாய்
ஆயபாவை	இடைப்பெண்ணான
நப்பின்னை தனக்கு	நப்பின்னைப் பிராட்டிக்கு
இறை	ஸ்வாமியாய்,
மற்றையோாக்கு எல்லாம்	அல்லாதார் எல்லார்க்கும்
வல துணை	வலிய துணையாய்
பஞ்ச பாண்ட வர்க்கு	பஞச பாண்டவர்களுக்கு
ஆகி	எல்லா வுறவு முறையும்தானே யாய்க்கொண்டு
வாய் உரை	அவாகள் சொன்ன வார்த்தைகளை
சென்று	துர்யோதனாதிகள் பக்கலிலே போயறிவித்து
தூது இயங்கும்	ஸ்ரீ தூது எழுந்தருளினவனாய்,
என் துணை	என்னைப் போல்வார்க்கெல்லாம் ஸஹாய பூதனாய்
எநதை தந்தை தம்மானை	என் குலநாதனானவனை

திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பே. வ்யா—அஞ்சாம் பாட்டு. (இன்துணையித்யாதி) நெஞ்சுக்கினிய துணையாயிருக்கிற, பதுமத்தலர்மகளுண்டு தாமரைப்பூவை உத்பத்திஸ்த்தானமாக உடைய பெரிய பிராட்டியார், அவளுக்கின்பனானவன். (தனக்கும்) எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயையாயிருக்கிற பெரிய பிராட்டியார் தான் "அகலகில்லேன்" என்று விரும்பி வர்த்திக்கும்படி அவளுக்கு ஸ்ப்ருஹணீயனானவன். ஸர்வேஶ்வரனை தனக்குங்கூடப்பொறைக்கு உவாத்தாயிருக்கிற பூமிப் பிராட்டியார்க்கு வல்லபனானவன், (தன் துணையித்யாதி) தன்னையே துணையாகவுடையளான, ஆயர்பாவையுண்டு நப்பின்னைப் பிராட்டி, அவளுக்கு ஸ்வாமியானவன். (மற்றையோரித்யாதி) இப்படியிருக்கையாலே அல்லாதாரெல்லார்க்கும் வலிய துணையானவன். (பஞ்ச) ஆஶ்ரிதரான பாண்டவர்களுக்காக, அவர்கள் வாயிற்சொல்லி விட்ட வார்த்தையை அங்கே சென்று சொல்லுவது, இங்கே வந்தறிவிப்பதாய், இப்படி ஆஶ்ரித விஷயத்தில் தாழ நின்ற நிலையாலே தானே துணையென்னுமிடத்தை எனக்கறிவித்தவன். (எந்தை) எனக்கு ஸ்வாமியாய் என் குலத்துக்கு நாதனானவன். 5

அந்தகன்சிறுவன் அரசர் தமரசற்கிளையவன் அணியிழையைச் சென்று*
எந்தமக்கு உரிமை செய்யெனத் தரியாது எம்பெருமான்! அருளென்ன*
சந்தமல்குழலா ளலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரும் எய்தி நூலிழப்ப*
இந்திரன சிறுவன் தேர்முன் நின்றானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 6

அந்தகன்	குருடனான த்ருதராஷ்ட்ரனுடைய
சிறுவன்	பிள்ளையாய்
அரசர்தம அரசற்கு	ராஜராஜனான தா்யோதனனுக்கு
இளையவன்	தம்பியான துஶ்ஶாஸநன்,
அணி	அலஙகரிக்கப்பட்ட
இழையை	ஆபரணங்களையுடையளான த்ரௌபதி பக்கலிலே
சென்று	போய், (சூதிலே உன்னையும் தோற்றாகள ஆகையாலே,)
எந்தமக்கு	எஙகளுக்கு
உரிமை செய்	அடிமை செய்
என	என்ன,
தரியாது	(அவள் அந்யசேஷத்வத்தைப்) பொறாமல்
எம்பெருமான்!	என் ஸ்வாமி!
அருள	என் பக்கல் க்ருபை பண்ணி ரக்ஷிக்க வேணும்.
என்ன	என்று அர்த்திக்க,
அல் சந்தம	இருண்ட நிறத்தையுடைய
குழலாள்	குழலையுடைய த்ரௌபதி பட்ட
அலக்கண்	துக்கத்தை
நூற்றுவாதம்	தா்யோதன ப்ராதாக்களான நூற்றுவருடைய
பெண்டிரும்	பாா்யைகளும்
எய்தி	அடைந்து
நூல்	மங்களஸூத்ரத்தையும்
இழப்ப	இழக்கும்படியாக
இந்திரன் சிறுவன்	இந்த்ரபுத்ரனான அாஜுனனுடைய
தேர் முன்	தேரின்முன்னே
நின்றானை	நின்று ஸாரத்தியம் பண்ணினவனை

திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பே. வ்யா—ஆறும் பாட்டு. (அந்தகன் சிறுவன்) குருடன் பெற்ற பிள்ளையாயிற்று. இத்தால்—அறிவுகேடு வழிவழி வருகிறதென்கை. பிதாவானவன் கண்ணஞ்ச வளர்க்க வளருகையன்றிக்கே தான் கண்டபடி மூலையடியே திரிந்தவன். (அரசரித்யாதி) ராஜ ராஜனை துர்யோதநனுக்குப் பின் பிறந்தவன், து:ஶாஸநனென்றபடி. அவன் கொண்டாடி வளர்க்கச் செருக்காலே வளர்ந்தவனென்று தீம்புக்குறுப்பாகச் சொல்லுகிறது. (அணியிழையை). மஹோத்ஸவமாகையாலே ஆபரணங்களாலே அலங்க்ருதையாய் நின்றவள் பக்கலிலே கிட்டி. (எந்தமக்குரிமை செய்யென) சூதிலே உன்னையுந்தோற்றார்கள், நீ போந்து எங்களுக்கு இழிதொழில் செய்யென்ன. (தரியாது) அவள் அந்ய சேஷத்வத்தைப் பொறுத்திலளாயிற்று. இவ்வளவிலே, ஸ்வாமியான நீ என் பக்கலிலே க்ருபை பண்ண வேணுமென்ன, "ஆண் பிள்ளைகளான பர்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க தூரஸ்த்தனை க்ருஷ்ணன் பேரைச்சொல்லுவானென்" என்று எம்பாரைக் கேட்க, "அறிந்தோமே! முன்பே சில ஸாருஸாரு கேட்டு வைத்தாள் போலே காணும். "மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:" என்று. இது தன்னை பட்டரைக் கேட்க. "பர்த்தாவின் கையைப் பிடித்துப்போகா நின்றாலும் இடறினால் அம்மே! என்னக்கடவது காண்" என்றருளிச் செய்தார். அர்த்தம் அதாயிருக்கச் செய்தே விசைப்புக் கிடந்தபடி காணும். (சந்தமல் குழலாள்) "சந்தம்" என்று நிறம். "அல்" என்கிற வித்தாலே இருளை லக்ஷித்து, நிறமிருண்ட குழலையுடையவளென்னுதல்; அன்றிக்கே, (சந்தமல்குழலாள்) சந்தநப்பூ மாறாத குழலையுடையவளென்னுதல். அவள்பட்ட அலக்கணுண்டு து:கம், அத்தை துர்யோதநாதிகளுடைய ஸ்த்ரீகள் பட்டு, அதில் தன்னேற்றமாக நூலுமிழந்தார்களாயிற்று. அவர்களுக்கு து:கம் நிலைநிற்கும்படி பண்ணினானாயிற்று. ... ...

(இந்திரனித்யாதி) வலியார்சிலரை அபாஶ்ரயமாகப் பற்றினாலும் தானே தாழ நின்று ரக்ஷகனாகவல்லனென்னு மிடத்தைச் சொல்லுகிறது. த்ரௌபதிக்கு பர்த்தாக்களு தவிற்றிலர், அர்ஜுனனுக்கு இந்திரனுதவிற்றிலன். 6

பரதனும்தம்பி சத்துருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும்*
இரவு நன்பகலும் துதிசெய்ய நின்ற இராவணாந்தகனை எம்மானை*
குரவமே கமழும் குளிர்பொழிலூடு குயிலோடு மயில்கள் நின்றால*
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 7

பரதனும்	ஸ்ரீ பரதாழ்வானும்
தம்பி	அவனுக்குத் தம்பியான
சத்துருக்கனனும்	ஸ்ரீ சத்ருக்நாழ்வானும்
இலக்குமனோடு	இளையபெருமாளோடு (கூட)
மைதிலியும்	பிராட்டியாரும்
இரவும்	ராத்திரியிலும்
நல் பகலும்	(பதார்த்த ப்ரகாசகமாய்) விலக்ஷணமான பகலிலும்
துதி செய்ய	ஸ்தோத்திரம் பண்ணும்படி
நின்ற	எழுந்தருளியிருக்கு மவனாய்
எம்மான்	எனக்குஸ்வாமியாய்
இராவணாந்தகனை	ராவணனை ஸம்ஹரித்த சக்ரவர்த்தித் திருமகனை

குரவம்	குரா மலர்கள்
கமழும்	பரிமளிக்கிற
குளிர்	குளிர்ந்த
பொழிலூடு	சோலைக்குள்ளே
குயிலோடு	(பாடுகிற) குயில்களோடு
மயில்கள்	மயில்களானவை
நின்று ஆல	ஒரு படிப்பட நின்று ஆடுமதாய்
இரவியின் கதிர்கள்	ஸூர்ய கிரணங்கள் (சோலைச் செறிவாலே)
நுழைதல் செய்தறியா	ஒருகாலும் நுழைந்தறியாத
	திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பே. வ்யா—ஏழாம் பாட்டு. (பரதனும் தம்பி சத்ருக்கனனும்) பரதாழ்வானும் அவனோடு கையடைப்பான ஸ்ரீ சத்ருக்நாழ்வானும். (இலக்குமனோடு மைதிலியும்) இதுவுமிங்ஙனேயொரு சேர்த்தி. (இரவு நன்பகலும்) ஸமர காலத்திலே கண்டநுபவித்தவர்களோடு கேட்டார்வாய் கேட்டாரோடு வாசியற ஏத்தா நிற்பர்களாயிற்று. தேசிகரடங்கலும் திரள் திரளாக நின்றாயிற்று ஏத்துவது. (இரவு நன் பகலும்) நமக்குமோர் காலம் நெஞ்சொழிந்த போது ஏத்துவதொன்றுண்டன்றோ. அங்ஙனன்றிக்கே திவாராத்ர விபாகமறக் கிட்டின தனையுமாழங்கால்படுகைக்குடலான வித்தனை. (இராவணாந்தகனை) இப்படி ஏத்துவதுதான்

ராவணவதம் பண்ணின அபதாந மொன்றுமே யாயிற்று; அவர்களோபாதி நானும் தோற்று ஏத்தும்படி பண்ணினவனை. (குரவமித்யாதி) குரவம் கமழாநிற்பதாய் ஶ்ரமஹரமான பொழிலினூடே குயில்களோடே கூட மயில்கள் ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ண. (இரவிபித்யாதி) ஈஶ்வராஜ்ஞை நடையாடாத தேசமாயிற்று. "பீஷோதேதி" என்றது அவ்விடத்தை யொழிய வாயிற்று. 7

பள்ளியிலோதி வந்ததன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம்*
ஒள்ளிய வாகிப்போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகி*
பிள்ளையைச்சீறி வெகுண்டு தூண்புடைப்பப் பிறையெயிற் றனல் விழிபேழ்வாய்*
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 8

பள்ளியில	வித்யாசாலையிலே
ஓதி வந்த	படித்து விட்டு தன்னருகே வந்த
தன் சிறுவன்	தன் பிள்ளையான ப்ரஹ்லாதாழ்வானுடைய
வாயில்	திருப்பவளத்தில
ஓராயிர நாமம்	(ஸர்வேச்வரனுடைய) ஒருஆயிரம திருநாமங்கள்
ஒளியவாகி	அழகாக
போத	தன்னடையே வர,
ஆங்கு	அவவிடததிலே
அதனுக்கு	அப்படி யெம்பெருமான் திருநாமங்களைச்சொல்லியதற்கு
ஒன்றும் ஓர்	சற்றுயினும்
பொறுப்பு இலனாகி	பொறுமையில்லாதவனாய்க் கொண்டு

பிள்ளையை	தன் புத்திரனை
சீறி வெகுண்டு	மிகக் கோபித்து
தூண்	(அவன் நட்ட) தூணை
புடைப்ப	அடிக்க (அதிலே)
பிறை	மூன்றாம்பிறை போன்ற
எயிறு	பற்களையும்
அனல்	நெருப்புப்பொறிகள் சிந்தா நின்றுள்ள
விழி	கண்களையும்
பேழ்வாய்	பெரிய வாயையு முடைத்தாய்,
தெள்ளிய சிங்கமாகிய	தெளிந்திருந்துள்ள ந்ருஸிம்ஹாவதாரஞ் செய்தருளின
தேவை	தேவனை

திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பெ. வ்யா—எட்டாம் பாட்டு. (பள்ளியிலோதி வந்த தன் சிறுவன்) பள்ளியோதும் பருவத்தில் சொன்னவையடங்கலும் சிரஸா வஹிக்க வேண்டும்படியிருக்கும். இதாயிற்றுப் பருவ மிருந்தபடி. அதுக்குமேலே தன் வயிற்றில் பிறந்த ப்ரஜை சொன்னவையடையப் பொறுக்க வேணும். (வாயிலித்யாதி) அவனப்போது சொல்லிற்று நாலிரண்டாகிலும் பருவத்துக்குத்தக்க வளவல்லாதபடி யிருக்கையாலே குவாலாகச் சொல்லுகிறார். (ஒள்ளிய வாகிப்போத) வயிற்றில் பிறந்தவன் சொல்லுகையாலே இனிதாயிருக்குமிறே. (ஆங்கு) அவ்விடத்தில். (அதனுக்கொன்றுமோர் பொறுப்பிலனாகி) பள்ளியோதும் பருவத்திற் சொல்லுவதெல்லாம் ப்ரியமாயிருக்கும்; தன் வயிற்றிற் பிறந்தவன் சொல்லிற்றெல்லாம் இனிதாயிருக்கும்; சத்ருவே சொல்லிலும் சிரஸா வஹிக்க வேண்டுமத்தைச் சொல்லிற்று. அஸஹ்யாபசார ப்ராசுர்யத்தாலே திருநாமம் கேட்டுப்பொறுக்க மாட்டாமையாலே முனிந்தானாயிற்று. (பிள்ளையை) திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக வயிற்றில் பிறந்தவனைக் கைவிட்டானவன். திருநாமம் சொன்னாரோடே தமக்கு ஸம்பந்தமாக நினைத்திருந்தபடியாலே "பிள்ளை" என்கிறார். (வெகுண்டு தூண்புடைப்ப) கோபத்தாலே செய்வதறியாதே தூணைத்தட்ட. (பிறையித்யாதி) பிறைபோலே யிருந்த எயிற்றையும், அக்நி போலேயிருந்த கண்களையும் புறப்பட விடா நின்றுள்ள பெரிய வாயையுமுடைய. (தெள்ளியசிங்கம்) ஹிரண்யனுடைய முரட்டு வடிவைக்கண்டு பிற்காலியாதே நரஸிம்ஹமாய் அவ்வழியாலே தானே ஆஶ்ரயணீயனென்னு மிடத்தை வெளியிட்டவன். 8

மீனமர்பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த*
கானமர் வேழம் கையெடுத்தலறக் கரா அதன் காலினைக்கதுவ*
ஆனையின் துயரம்தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டானை*
தேனமர் சோலை மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. 9

ப்ரஹ்மோத்ஸவம் ஏழாம் நாள்



ரதோத்ஸவம்

PHOTO BY T N SRINIVASAN

மீன அமர	மீன்கள் பொருந்திய
பொய்கை	மடுவிலே
நாண் மலர்	அப்போதலர்ந்த புஷ்பங்களை
கொய்வான்	பறிக்க வேணுமென்கிற
வேட்கையினோடு	ஆசையோடே
சென்று இழிந்த	சென்றிழிந்ததாய்
கான்	காட்டிலே
அமர் வேழம்	ஸஞ்சாரம் பண்ணக்கடவ யானையானது
கை	[illegible] துதிக்கையை
எடுத்து அலற	[illegible] கூப்பிடும்படியாக
கரா அதன்	முதலையானது அதினுடைய
காலினை கதுவ	காலை கவ்வ (அந்தஸமயத்திலே)
ஆனையின்	ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
துயரம் தீர	துக்கம் தீரும்படி
புள் ஊர்ந்து	பெரிய திருவடியை மேற்கொண்டு
சென்று	விரைந்து வந்து
நின்று	அப்பொய்கைக் கரையிலே நின்று
ஆழி தொட்டானை	திருவாழியை விடுத்த ஸ்வாமியை
தேன் அமர்	தேன் மாறாத
சோலை	சோலைகளாலே சூழப்பட்ட
மாடமாமயிலைத்	திருவல்லிக்கேணிக் கண்டேன்.

பெ. வ்யா—ஒன்பதாம் பாட்டு (மீனமர்த்யாதி) நெடுநாள் பூத்தேடிப் பெருமையாலே இடர்பட்டுத் திரிந்த பின்பு ப்ரப்த பாகத்தைக் கண்டு, க்ஷுத்ர மத்ஸ்யத்துக்கு மேற்பட ஆற்ற வல்லமையுண்டென்று பலபாரமே வந்து செவ்விப்பூவைப் பறிக்கைக்காகப் பெரிய அபிநிவேசத்தோடே வந்திழிந்த (கானமர் வேழம்) காட்டிலே ஸஞ்சாரம் பண்ணக்கடவ யானையானது கையெடுத்துக் கூப்பிடும்படியாக முதலையானது இதின் காலைக் கதுவ. முதலைக்குத் தன் நிலமாய் இதுக்கு வேற்று நிலமாயிருக்கும். ஆனை நெடுநாள்பட்ட இடரெல்லாம் போம்படியாகப் பெரிய திருவடியை மேற்கொண்டு வந்து, ஆனைக்கிடரின்றிக்கே முதலைக்கே இடராம்படி திருவாழியை விடுத்தவனை. வண்டுகளார்ந்த சோலையையும் மாடங்களையுமுடைத்தான மயிலாப்பூரில் திருவல்லிக்கேணிக் கண்டேனே. ... 9

மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும்*
தென்னன் தொண்டையர் கோன்செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி நின்றானை*
கன்னி நன்மாடமங்கையர் தலைவன் காமருசீர்க் கலிகன்றி*
சொன்ன சொல்மாலை பத்துடன் வல்லார் சுகமினிதாள்வர் வானுலகே. 10

மன்னு தண்	நித்யமாய்க் குளிர்ந்திருந்துள்ள
பொழிலும்	சோலைகளையும்
வாவியும்	நீர்நிலைகளையும்
மதிளும்	மதிள்களையும்
மாடம்	மாடங்களையும்
மாளிகையும்	[illegible] க்ருஹங்களையும்
மண்டபமும்	மண்டபங்களையுமுடைத்தாம்படி
தென்னன்	பாண்டிய ராஜனோடு ஒத்தவரான
தொண்டையர் கோன்	தொண்டை நாட்டு ஜனங்களுக்குத் தலைவனான சக்ரவர்த்தி
செய்த	ப்ரதிஷ்டை பண்ணின
நல்	அழகியதாயிருந்துள்ள
மயிலைத் திருவல்லிக்கேணி	மயிலாப்பூரிலுண்டான திருவல்லிக்கேணியிலே
நின்றானை	நின்றவனை விஷயமாக,
கன்னி	அரணாகப் போரும்படியாய்
நல்	நன்றாயிருக்கும்
மாடம்	மாடங்களையுடைத்தான
மங்கையர்	திருமங்கைநாட்டுக்கு
தலைவன்	ப்ரதானராய்
காமரு சீர் கலிகன்றி	அழகிய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை உடையவரான ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்ததாய்
சொல்மாலை	சப்த ஸந்தர்ப்பமான
பத்துடன்	பத்துப்பாட்டுகளையும்
வல்லார்	அப்யஸிக்கவல்லவர்கள்
இனிது சுகம்	நித்யாநுபவம் பண்ணும்படியான
வானுலகு	பரமபதத்தை
ஆள்வர்	கிட்டிப்பெறுவர்கள்.

பெ. வ்யா—பத்தாம்பாட்டு (மன்னுதண் பொழிலுமித்யாதி) நித்யமாய்க் குளிர்ந்திருந்துள்ள பொழில்களும், நீர் நிலங்களும், அரணாகப்போரும்படியான மதிள்களும், மாடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும், இன்னமும் சொல்லிச் சொல்லாத நன்மைகளுமெல்லாமுண்டாம்படியாயிற்றுத் தொண்டைமான் சக்ரவர்த்தி யேற்றிற்று. (கன்னி) அரணாகப் போரும்படியாய் நன்றாயிருக்கிற மாடங்களையுடைய திருமங்கைக்கு ப்ரதாநர். (காமரு சீர்க்கலிகன்றி) ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடைய ஆழ்வாரருளிச்செய்த பத்தையும் அப்யஸிக்கவல்லார்கள். (சுகமினிதாள்வர் வானுலகே) நித்யாநுபவம் பண்ணலாம்படியான நித்ய விபூதியை ப்ராபிக்கப் பெறுவர். 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்

பெரியதிருமொழி 2-ம் பத்து 3-ம் திருமொழி 2-ம் பாசுரத்தில் 'நந்தனூர்களிற்றை' வ்யாக்யானம் :—

* "நந்தனூர் களிற்றை"—நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக்கன்றுபோலே விளையாடினவனென்றவாறு. யானைக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்யமுண்டு :—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம அபூர்வ வஸ்துபோலவேயிருந்து பரமாநந்தத்தைத் தரும; எம்பெருமானும் "அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதமே" என்னும்படியிருப்பன்.

2. ஆனையின்மீது ஏறவேண்டியவன் ஆனையின் காலைப்பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடம் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையேபற்றிச் சேரவேண்டும்.

3. ஆனை தன்னைக்கட்டத் தானே கயிறு கொடுக்கும; "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடி எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன். "பகவந் பக்திமபி ப்ரயச்ச மே" "மதிநலமருளினன்."

4. யானையை நீராட்டினாலும் அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடேசேரும்; எமபெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரமபவித்திரனா யிருக்கச் செய்தேயும *பொய்ந் நின்ற ஞானமும பொல்லாவொழுக்கு மழுக்குடமபுடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யத்தாலே. "ஸ்வஸம்ஸ்க்ருத த்ராவிடவேதஸூக்தைரப்யாந்தம் மதுகதைமலிநீகரோதி, ஸ்ரீரங்ககமர: கலபம் க ஏவ ஸ்நாத்வாபி தூளீரஸிகம் நிஷேத்தா" என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவ ச்லோகத்தின் படியுமாம்.

5. யானையைப் பிடிக்கவேண்டில் பெண்யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும்: பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப்பாகனுக்கே தெரியும; எம்பெருமானுடைய பாஷை திருக்கச்சி நம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளனோடே பேசுமவரிறே நம்பிகள்.

8. யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் பாகனிட்ட வழக்கு; எம்பெருமானும் "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்க வேண்டா—உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்றும், "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்றுஞ்சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு ஸர்வாத்மநா விதேயனிறே.

9. யானை உண்ணும்போது இறைக்கும அரிசி பலகோடி நூறுயிர மெறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுதுசெய்து சேஷித்த ப்ரஸாதத்தாலே பலகோடி பக்தவர்க்கங்களை உஜ்ஜீவிக்கக் காண்கிறோமிறே.

10. யானைக்குக் கை நீளம; எம்பெருமானும அலம்புரிந்த நெடுந்தடக்கையனிறே. "நீண்ட அத்தக்கருமுகிலை யெம்மான்றன்னை."

11. யானை இறந்தபின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் ஸாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினபின்பும் இதிஹாஸ புராணங்கள அருளிச்செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

12. யானைக்கு ஒரு கையே உளளது; எம்பெருமானுக்கும் கொடுக்குங்கையொழியக் கொள்ளுங்கை இல்லையிறே. "அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதம்."

13. பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு. ஆதலால் அவனுக்குக் **களிறு** மூற்றுவமையாம். இங்ஙனே மற்றும்பல உவமைப் பொருத்தங்கள கண்டு கொள்க.

[*இவை, ஸ்ரீ.காஞ்சீ. ப்ர. மஹாவித்வான் அண்ணங்கராசார்யஸ்வாமி அநுமதிபெற்று அச்சிடப்பெறறன.]

ப்ரஹ்மோத்ஸவம் எட்டாம் நாள்

PHOTO BY T. N. SRINIVASAN

நவனீத க்ருஷ்ணன்

ப்ரஹ்மோத்ஸவம் எட்டாம் நாள்

குதிரை வாஹனம்

PHOTO BY T. N. SRINIVASAN

SRIYA S... 19015

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொருள் விளக்கம்

பண்டிட் அ. மு. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி

यं सन्तः प्रणमन्ति यस्य चरितं शंसन्ति वेदा यतः
संभूतं लयमेति यत्र च जगद् येनैव संरक्षितम् ।
यस्मै यज्वगणाः क्रतुं विदधते यः पूरुषोत्तमः
सोऽयं वेङ्कटकृष्ण इत्यभिहितः श्रीपार्थसूतोऽपि सन् ॥
पादाम्भोरुहभक्तिभारभरितैराकारितो योगिभिः
तानुद्धर्तुमशक्नुवन्निव सपद्यापन्नमहाम्भोनिधेः ।
तद्वैकुण्ठमकुण्ठवैभवमपि त्यक्त्वाऽत्र शेषाचले
तिष्ठन् कैरविणीतटे च तनुताच्छ्रेयांसि भूयांसि नः ॥

யம் ஸந்த: ப்ரணமந்தி யஸ்ய சரிதம் ஶம்ஸந்தி வேதா யத:
ஸம்பூதம் லயமேதி யத்ர ச ஜகத் யேநைவ ஸம்ரக்ஷிதம்,
யஸ்மை யஜ்வகணா: க்ரதும் விதததே ய: பூருஷோத்தம:
ஸோயம் வேங்கடக்ருஷ்ண இத்யபிஹித: ஸ்ரீபார்த்தஸூதோபி ஸந் ||
பாதாம்போருஹ பக்தி பாரபரிதை ராகாரிதோ யோகிபி:
தாநுத்தர்த்துமஶக்நுவந்நிவ ஸபத்யாபந்மஹாம்போநிதே: |
தத்வைகுண்டமகுண்டவைபவமபி த்யக்த்வாऽத்ர ஶேஷாசலே
திஷ்டந் கைரவிணீதடே ச தநுதாத் ஶ்ரேயாம்ஸி பூயாம்ஸி ந: ||

திவ்யதேசங்களுக்கு ஆழ்வார்கள் மங்களாஶாஸநம் பெற்ற ஏற்றமொரு புறமிருக்க ஸுவர்ண புஷ்பத்துக்கு ஸ்வாபாவிகமான பரிமளம் போலே க்ஷேத்ரமாஹாத்ம்யத்தாலுள்ள ஏற்றமும் முக்யமானது.

இந்த ப்ருந்தாரண்ய க்ஷேத்ரத்தில் ஐந்து மூர்த்திகள் பேயார், திருமழிசைப்பிரான் திருமங்கைமன்னன் ஆகிய மூவர் மங்களாஶாஸநம் பெற்று விளங்குவதையறிவது போலே இதிலுள்ள ஐந்து மூர்த்திகளையும் ஐந்து தீர்த்தங்களோடு கைரவிணீ தீர்த்தத்தையும் இந்த க்ஷேத்ரமாஹாத்ம்யம் கொண்டறிவதும் முக்கியமே. மேலும் இம்மாஹாத்ம்யம் ப்ரதி பங்குனித் திருநாளிலும் மன்னநாதன் திருவோலக்கத்தில் திருச்செவிசாத்தியருளும் பாக்கியமுடைத்து. இப்படியிருக்க இந்த க்ஷேத்ரமாஹாத்ம்யத்தை அச்சியற்றி யாவரும் கண்டறிய இந்நாள்வரை யியலாதது வெகுநாளாகவே உள்ள ஒரு குறையே. இக்குறை தீர ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமான் அருளால் இம்மாஹாத்ம்யம் அச்சியற்றப்பெற்று வெளி வருகிறது இக்குறையாளர் பாக்யமே என்னலாம்.

இத்திவ்யதேஶத்தில் ஐந்து எம்பெருமான்களும் ஐந்து தீர்த்தங்களோடு கைரவிணீ தீர்த்தமும் உள. ஐந்து மூர்த்திகள்—மன்னநாதன், அழகிய சிங்கர், சக்ரவர்த்தி திருமகன், பார்த்தஸாரதி, ஆனையின் துயர் தீர்த்தவன் (கஜேந்த்ரவரதன்). ஐந்து தீர்த்தங்கள்—இந்த்ர ஸோம மீந அக்நி விஷ்ணு என்பவை.

[illegible]

[illegible] नक्तं नमेत् गौरिं सकृत्कैरविणीजलात् ॥

[illegible] பெயர்ப்பு. இம் [illegible] 1-ல் திருச்சேர்க்கையைப் பற்றியும் [illegible] 40-வது ஸ்லோகம் [illegible] ப்ரந்தாரண்யத்தையும் கைரவி [illegible] மங்களாசாஸநம் செய் [illegible]

[illegible] இவ்விருவர்கள் [illegible] ரங்கநாதன். மூலவர் ஶயநத் [illegible] —என்றே பாசுரத் [illegible] திருமழிசைப்பிரான் [illegible] "வேதத்தை" என்கிற [illegible]

[illegible] இவர் ஆவிர்ப் [illegible] என்கிற பாசுரத்தால் மங்கலா [illegible] என்றே பாசுரத்திருநாமம்.

[illegible] இவர் [illegible]. ஆவிர்ப்பாவம். [illegible] பாசுரத்தால் மங்களாஶாஸநம். மதுமான் [illegible]

4. [illegible] இவர் [illegible]. ஆவிர்ப்பாவம் 39-ம் [illegible] ஆராதனம். மங்களாசாஸனம் பெரியதிரு [illegible] பாசுரங்களால். மூலவர் [illegible] அறியக்கிடக் கிறது. [illegible]

[illegible] திருவேங்கடமுடையானை ஸேவித்து [illegible] ஸேவிக்க வேண்டிக் கொள்ள: ப்ருந்தா [illegible] இங்கே வந்து அப்படியே ஸேவித்து [illegible] வாழ்ந்தனன்.

5. [illegible] ஆவிர்ப்பாவம் 71 [illegible] ப்ரதிஷ்டை. "மீனமர்பொய்கை" மங்களாஶாஸநம்.

[illegible] இந்த்ர ஸோம மீன அக்நி விஷ்ணு இவ்வைந்து [illegible] பேசுவன. பலஸ்ருதியுடன் 10-வது அத்யாயம் [illegible].

[illegible] ஹர்ஷி இக்கைரவிணியில் [illegible] ஒரு நாள் மிக்க அழகிய மீன் ஒன்று [illegible] தபது [illegible] கெடும் என்று எண்ணி அதை [illegible] அப்புறம் செல்ல நியமித்தார். அப்படியே அம்மீனும் [illegible] கூட இக்கைரவிணியில் கிடையாது என்பது [illegible] இத்திவ்ய தேசவைபவத்தை [illegible].

[illegible] அச்சுக்கு வேண்டிய உதவியும் செய்த [illegible] ஸ்ரீ [illegible] கோபாலகிருஷ்ணமாசார்ய ஸ்வாமி இதற்கு [illegible] மிகவும் பாராட்டத்தக்கது.

திருவல்லிக்கேணி [illegible]

அ. மு. ஸ்ரீ. பண்டிட்



PHOTO BY T N SRINIVASAN

ஆளும் பல்லக்கில் பெருமாள் கொண்டையுடன் சேவை

॥ श्रीः ॥





श्री रुक्मिणीसमेत श्री पार्थसारथि (वेङ्कटकृष्ण) स्वामिने नमः

ஸ்ரீ ருக்மிணீஸமேத ஸ்ரீ பார்த்தஸாரதி (வேங்கடக்ருஷ்ண) ஸ்வாமிநே நம:

श्रीबृन्दारण्यक्षेत्रमाहात्म्यम्

ஸ்ரீ ப்ருந்தாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம்

श्रीशैलेशदयापात्रं धीभक्त्यादिगुणार्णवम् । यतीन्द्रप्रवणं वन्दे रम्यजामातरं मुनिम् ।

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |

யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

लक्ष्मीनाथसमारम्भां नाथयामुनमध्यमाम् । अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |

அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

यो नित्यमच्युतपदाम्वुजयुग्मरुक्मव्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
अस्मद्गुरोर्भगवतोऽस्य दयैकसिन्धोः रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம-
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர்பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ||

माता पिता युवतयस्तनया विभूतिः सर्वं यदेव नियमेन मदन्वयानाम् ।
आद्यस्य नः कुलपतेर्वकुलाभिरामं श्रीमत्तदङ्घ्रियुगलं प्रणमामि मूर्ध्ना ॥

மாதாபிதா யுவதஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுலாபிராமம்
ஶ்ரீமத்ததங்க்ரியுகலம் ப்ரணமாமி மூர்த்நா ||

भूतं सरश्च महदाह्वयभट्टनाथश्रीभक्तिसारकुलशेखरयोगिवाहान् ।
भक्ताङ्घ्रिरेणुपरकालयतीन्द्रमिश्रान् श्रीमत्पराङ्कुशमुनिं प्रणतोऽस्मि नित्यम् ॥

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வயபட்டநாத
ஶ்ரீபக்திஸாரகுலஶேகரயோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஶ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ||

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् । प्रसन्नवदनं ध्यायेत्सर्वविघ्नोपशान्तये ॥

ஶுக்லாம்பரதரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வ விக்நோபஶாந்தயே ||

यस्य द्विरदवक्त्राद्याः पारिषद्याः परश्शतम् । विघ्नं निघ्नन्ति सततं विष्वक्सेनं तमाश्रये ॥

யஸ்ய த்விரதவக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஶ்ஶதம் |
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாஶ்ரயே ||

॥ श्रीः ॥

श्रीबृन्दारण्यक्षेत्रमाहात्म्ये प्रथमोऽध्यायः

ஸ்ரீ ப்ருந்தாரண்யக்ஷேத்ரமாஹாத்ம்யே ப்ரதமோऽத்யாயঃ

नारदः— நாரதঃ—

देवदेव महादेव नीलकण्ठ जगद्गुरो । श्रुतं मयाऽखिलं सम्यक् माहात्म्यं विष्णुसंसदाम् ॥

தேவதேவ மஹாதேவ நீலகண்ட ஜகத்குரோ |
ஶ்ருதம் மயாऽகிலம் ஸம்யக் மாஹாத்ம்யம் விஷ்ணுஸம்ஸதாம் || 1

வாரீர் தேவர்களுக்கும் தேவதையாய் நீலகண்டராய் மஹாதேவ நாமகரான ஜகத் குருவே! எம்பெருமானுடைய திவ்ய தேசங்களின் ஸமஸ்தமான மாஹாத்ம்யமானது நன்றாய் என்னாலே கேட்கப்பட்டது.

न तृप्तिर्जायते मेऽद्य वैभवं शृण्वतो हरेः ।

ந த்ருப்திர்ஜாயதே மேऽத்ய வைபவம் ஶ்ருண்வதோ ஹரேঃ | 2

ஹரியினுடைய வைபவத்தைக் கேளாநின்ற எனக்கு இப்போது திருப்தி உண்டாக வில்லை.

अधुना नैमिशारण्यं प्राप्तवानहमव्ययम् । पुण्यं पुण्यतमैर्नित्यं सेवितं मुनिसत्तमैः ॥

அதுநா நைமிஶாரண்யம் ப்ராப்தவாநஹமவ்யயம் |
புண்யம் புண்யதமைர்நித்யம் ஸேவிதம் முநிஸத்தமைঃ || 3

இப்போது நான் புண்யாத்மாக்களான ருஷிச்ரேஷ்டர்களாலே நித்யவாஸம்பண்ணப் பட்டதாய் அவிவ்ருத்தமாய் தர்மாதி புருஷார்த்த ப்ரதமான நைமிஶாரண்யத்தை அடைந்தேன்.

तत्राद्राक्षं मुनिवरान् सप्तर्षींश्च महात्मनः । अन्यानपि महाभागान् भगवद्भक्तिभावितान् ॥

தத்ராத்ராக்ஷம் முனிவராந் ஸப்தர்ஷீம்ஶ்ச மஹாத்மநঃ |
அந்யாநபி மஹாபாகாந் பகவத்பக்திபாவிதாந் || 4

அந்த நைமிஶாரண்யத்திலே மிகவும் ஜ்ஞாதாக்களாய் மநநஶீலர்களான ருஷிகளுக் குள்ளே ச்ரேஷ்டர்களான ஸப்தர்ஷிகளையும் பகவத்பக்தியோகத்தாலே ச்லாக்யர்களாயும் மஹாபாக்யவான்களாயுமுள்ள வேறே சில ருஷிகளையும் கண்டேன்.

सनत्कुमारो भगवान् तेषां मध्ये महात्मनाम् । आसीनश्च मया दृष्टो वसूनामिव वासवः ॥

ஸநத்குமாரோ பகவாந் தேஷாம் மத்யே மஹாத்மநாம் |
ஆஸீநஶ்ச மயா த்ருஷ்டோ வஸூநாமிவ வாஸவঃ || 5

மஹாத்மாக்களான அந்த ருஷிகளுடைய மத்தியில் இராநின்ற பகவானான ஸநத் குமாரர் அஷ்டவஸுக்களினுடைய நடுவேயிருக்கும் தேவேந்திரன்போல் என்னாலே காணப்பட்டார்.

तमप्रमेयविभवं तांश्च दृष्ट्वा महामुनीन् । तदाश्रमपदं दिव्यं प्रविष्टो हृष्टमानसः ॥

தமப்ரமேயவிபவம் தாம்ஶ்ச த்ருஷ்ட்வா மஹாமுநீந் |
ததாஶ்ரமபதம் திவ்யம் ப்ரவிஷ்டோ ஹ்ருஷ்டமாநஸঃ || 6

நான், திவ்யமான அந்த ஆச்ரமபதத்தை ப்ரவேசித்தவனாய்க் கொண்டு, அவாங் மநஸகோசரமான வைபவத்தை யுடைய அந்த ஸநத்குமாரரையும் தபஸ்விகளான அந்த மஹர்ஷிகளையும் ஸேவித்து மிகவும் ஸந்துஷ்டனானேன்.

कथाः कथयतां तेषां शौनको वाक्यमब्रवीत् । सनत्कुमारं देवेशं ज्वलन्तं स्वेन तेजसा ॥

கதாః கதயதாம் தேஷாம் ஶௌநகோ வாக்யமப்ரவீத் |
ஸநத்குமாரம் தேவேஶம் ஜ்வலந்தம் ஸ்வேந தேஜஸா || 7

பகவத்கதைகளை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டிருக்கும் அந்த மஹர்ஷிகளினுடைய நடுவே தன்னுடைய தபஸ்ஸினாலே விளங்காநின்றும் தேவச்ரேஷ்டருமான ஸநத்குமாரரைப்பார்த்து, ஶௌநகர் வக்ஷ்யமாணப்ரகாரமாக ஒரு வார்த்தை சொன்னார்.

शौनकः— சௌநகः—

जम्बूद्वीपे पुराणस्य पुरुषस्य गदाभृतः । अष्टोत्तरशतानीति स्थानानि भगवन् श्रुतम् ॥

तान्यनुक्रमशःश्रोतुमिच्छामि मुनिपुङ्गव ॥

ஜம்பூத்வீபே புராணஸ்ய புருஷஸ்ய கதாப்ருதঃ |
அஷ்டோத்தரஶதாநீதி ஸ்தாநாநி பகவந் ஶ்ருதம் ||
தாந்யநுக்ரமஶஶ்ரோது மிச்சாமி முநிபுங்கவ || 8

வாரீர் த்ரிகாலவேதியான ஸநத்குமாரரே! முன் ஜம்பூத்வீபத்திலே கௌமோதகீதாரியான புராண புருஷனுக்கு நித்யமான வாஸஸ்தாநங்கள் நூற்றெட்டு என்று என்னாலே கேட்கப்பட்டது. வாரீர் முநிச்ரேஷ்டரான ஸநத்குமாரரே! அந்த திவ்யதேசங்களை க்ரமமாகக் கேட்கவேணுமென்று இச்சிக்கிறேன்.

नारदः— நாரதः—

शौनकेनैवमुक्तस्तु मुनिना भावितात्मना । सनत्कुमारो भगवानिदं वचनमब्रवीत् ॥

ஶௌநகேநைவமுக்தஸ்து முநிநா பாவிதாத்மநா |
ஸநத்குமாரோ பகவாநிதம் வசநமப்ரவீத் || 9

தபஸ்வியான ஸநத்குமாரரும் மநநஶீலராயும் பரமாத்மாவை த்யாநம் பண்ணுபவருமான ஶௌநகராலே இப்படி ப்ரச்நம் பண்ணப்பட்டவராய்க்கொண்டு வக்ஷ்யமாண ப்ரகாரமாக ஒரு வார்த்தை சொன்னார்.

सनत्कुमारः— ஸநத்குமாரः—

अष्टोत्तरशतान्येव स्थानान्यत्र महामुने । विष्णोस्तस्यानुपूर्व्येण कथयामास तानि सः ॥

அஷ்டோத்தரஶதாந்யேவ ஸ்தாநாந்யத்ர மஹாமுநே |
விஷ்ணோஸ்தஸ்யாநுபூர்வ்யேண கதயாமாஸ தாநி ஸः || 10

வாரீர் மநநஶீலரான சௌநகரே! இந்த ஜம்பூத்வீபத்திலே எம்பெருமானுக்கு முக்யமான ஸ்தலங்கள் நூற்றெட்டுகள் இருக்கின்றன என்று அந்த ஸநத்குமாரர் அந்த எம்பெருமானுடைய ஸம்பந்தங்களுள்ள அந்த திவ்யதேசங்களின் வைபவத்தை க்ரமமாகச் சொன்னார்.

ततस्तेनान्तरा किञ्चिद्बृन्दावनमिति श्रुतम् । विष्णोस्थानं महत्पुण्यमिति संकीर्तितं तदा ॥

तत्रापि मूर्तयः पञ्च सन्ति विष्णोर्महात्मनः । इति संप्रस्तुतं तेन तत्र तच्च मया श्रुतम् ॥

ததஸ்தேநாந்தரா கிஞ்சித் ப்ருந்தாவநமிதி ஶ்ருதம் |
விஷ்ணோஸ்ஸ்தாநம் மஹத்புண்யமிதி ஸங்கீர்த்திதம் ததா || 11
தத்ராபி மூர்த்தயঃ பஞ்ச ஸந்தி விஷ்ணோர்மஹாத்மநঃ |
இதி ஸம்ப்ரஸ்துதம் தேந தத்ர தச்ச மயா ஶ்ருதம் || 12

அதற்குமேல் அந்த ஸநத்குமாரராலே அந்த திவ்ய தேசங்களுக்குள்ளே ஓரொரு திவ்யதேசமானது ப்ருந்தாவனமென்று சொல்லப்பட்டது. அந்த ப்ருந்தாவனமானது விஷ்ணுவுக்கு வாஸஸ்தாநமென்றும் ஸகல புருஷார்த்தப்ரதமென்றும் சொல்லப்பட்டது.

அந்த ப்ருந்தாவனத்திலேயும் பரமாத்மாவான விஷ்ணுவுக்கு ஐந்துவிதமான திவ்யமங்கள விக்ரஹங்கள் உள்ளனவென்று அந்த ஸநத்குமாரராலே ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அந்த திவ்யதேச வைபவம் சொல்லுமளவில் கீழே சொல்லப்பட்ட அந்த ப்ருந்தாவநவைபவம் என்னால் கேட்கப்பட்டது.

तच्छ्रुत्वा तत्र देवेश त्वां द्रष्टुं प्राप्तवानहम् । इमं गिरिवरं रम्यं कैलासं चन्द्रशेखर ! ॥

தச்ச்ருத்வா தத்ர தேவேஶ த்வாம் த்ரஷ்டும் ப்ராப்தவாநஹம் |
இமம் கிரிவரம் ரம்யம் கைலாஸஞ் சந்த்ரஶேகர || 13

வாரீர் தேவச்ரேஷ்டரான சந்த்ரஶேகரரே! அந்த பிருந்தாவந வைபவத்தைக்கேட்டு உம்மைப் பார்ப்பதையும் பொருட்டு நான் பர்வதச்ரேஷ்டமான கைலாஸத்தை அடைந்தேன்.

कुत्र तद्भुवि देवेश बृन्दारण्यमिति श्रुतम् । स्थानं विष्णोर्महत्तस्य मूर्तयः पञ्चकास्तथा ॥

குத்ர தத்புவி தேவேஶ ப்ருந்தாரண்யமிதி ஶ்ருதம் |
ஸ்தாநம் விஷ்ணோர்மஹத்தஸ்ய மூர்த்தய: பஞ்சகாஸ்ததா || 14

வாரீர் தேவச்ரேஷ்டரான ஶம்புவே! பூமியிலே பிருந்தாரண்யமென்று சொல்லப்பட்ட எம்பெருமானுக்கு வாஸ ஸ்தானமாய் மஹத்தான அந்த திவ்ய தேஶந்தான் எவ்விடத்திலே? அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய ஐந்தான திவ்யமங்கள விக்ரஹங்கள்தான் எப்படிப்பட்டவை?

तत्र किं तीर्थमित्युक्तं प्रशस्तं मुनिभिर्भुवि । किं तस्य वैभवं चापि तीर्थस्य च दयानिधे ॥

एतत्सर्वं मम ब्रूहि श्रोतुमिच्छामि तत्त्वतः ॥

தத்ர கிம் தீர்த்தமித்யுக்தம் ப்ரஶஸ்தம் முநிபிர்புவி |
கிந்தஸ்ய வைபவம் சாபி தீர்த்தஸ்ய ச தயாநிதே ||
ஏதத் ஸர்வம் மம ப்ரூஹி ஶ்ரோதுமிச்சாமி தத்த்வத: || 15

இந்த பூமியிலே அந்த ப்ருந்தாவனத்தில் ருஷிகளாலே ப்ரஶஸ்தமாகச் சொல்லப்பட்ட தீர்த்தம் எது? அந்த தீர்த்தத்தினுடைய வைபவம் எப்படிப்பட்டது? வாரீர் தயாநிதியான ஶம்புவே! இது எல்லாவற்றையும் நான் தத்த்வமாகக் கேட்க இச்சிக்கிறேனாகையால், கீழ் என்னால் ப்ரச்நம் பண்ணப்பட்ட எல்லா வ்ருத்தாந்தத்தையும் நீர் எனக்குப் பரக்கச் சொல்லவேணும்.

महेश्वरः— மஹேஶ்வர:—

कोवा वक्तुं समर्थोऽस्ति वैभवं कैटभद्विषः । देवासुरर्षयस्सर्वे समेताश्शुद्धमानसाः ॥

सप्रजापतयश्चापि बहुभिर्ब्रह्मवत्सरैः । वक्तुं वैभवमेतेषां न शक्ता इति मे मतिः ॥

கோவா வக்தும் ஸமர்த்தோऽஸ்தி வைபவம் கைடபத்விஷ: |
தேவாஸுரர்ஷயஸ்ஸர்வே ஸமேதாஶ்ஶுத்தமாநஸா: || 16
ஸப்ரஜாபதயஶ்சாபி பஹுபிர்ப்ரஹ்மவத்ஸரை: |
வக்தும் வைபவமேதேஷாம் ந ஶக்தா இதி மே மதி: || 17

கைடபாஸுர விஜயியான ஶ்ரிய:பதியினுடைய வைபவத்தைச் சொல்வதற்கு ஸமர்த்தனான புருஷனவன் எவன்தான் இருக்கிறான்? சுத்தமநஸ்கர்களான ப்ரஹ்மாதி ஸமஸ்த தேவதைகளும நாரதாதி தேவர்ஷிகளும் தக்ஷர்முதலிய நவப்ரஜாபதிகளோடு கூடினவர்களாய்க் கொண்டும் இன்னும் அநேக ருஷிகளோடு கூடினவர்களாய்க் கொண்டும், அந்த ப்ருந்தாரண்யத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான்களென்ன, அந்த ப்ருந்தாரண்யமென்ன அதிலிருக்கும் புண்ய தீர்த்தங்களென்ன இதுகளுடைய எல்லா வைபவத்தையும் அநேக ஸம்வத்ஸரங்களாலும் சொல்ல ஸமர்த்தர்கள் அன்று என்று எனக்குத் தோற்றுகிறது.

तथाऽपि तव वक्ष्यामि भक्तियुक्तस्य नारद । यन्मया विदितं किञ्चित्तच्छृणुष्व समाहितः ॥

ததாऽபி தவ வக்ஷ்யாமி பக்தியுக்தஸ்ய நாரத |
யந்மயா விதிதம் கிஞ்சித் தத் ஶ்ருணுஷ்வ ஸமாஹிதஃ || 18

அப்படியானாலும், வாரீர் நாரதரே! என்னாலே யாதொரு வைபவமானது ஸங்க்ரஹமாக அறியப்பட்டிருக்கிறதோ அந்த ப்ருந்தாரண்ய வைபவத்தை, பக்தியுக்தரான உமக்குச் சொல்லுகிறேன். நீர் ஸாவதாநமநஸ்காராய் கேளும்.

तोयाद्रिरिति विख्यातः पर्वतप्रवरो महान् । तत्रास्ते भगवान्देवः श्रीपतिर्गरुडध्वजः ॥

नित्यं संसेवितस्सर्वैर्देवासुरमहर्षिभिः । महाभागवतैश्चान्यैर्ज्ञातपूर्वस्त्वया मुने ॥

यत्र संसारजलधिमध्यमग्नान् समुद्धरन् । मनुजान्माधवो देवः कृपापरवशोऽवति ॥

தோயாத்ரிரிதி விக்யாதஃ பர்வத ப்ரவரோ மஹாந் |
தத்ராஸ்தே பகவாந்தேவஃ ஸ்ரீபதிர்கருடத்வஜஃ || 19
நித்யம் ஸம்ஸேவிதஸ்ஸர்வைர் தேவாஸுர மஹர்ஷிபிஃ |
மஹாபாகவதைஶ்சாந்யைர்ஜ்ஞாதபூர்வஸ்த்வயா முநே || 20
யத்ர ஸம்ஸார ஜலதிமத்யமக்நாந் ஸமுத்தரந் |
மநுஜாந் மாதவோ தேவஃ க்ருபாபரவஶோऽவதி || 21

ஶ்ரியஃபதியானவர் க்ருபாபரவசராய்க்கொண்டு எந்த பர்வதத்திலே நித்யவாஸம் பண்ணுகின்று கொண்டு ஸம்ஸாரஸாகர மத்யமக்நரான மனுஷ்யர்களை உத்தரிப்பியாநின்று கொண்டு, ரக்ஷியா நிற்கிறுரோ, அப்படி ப்ரஸித்தமாயும் மஹத்தரமாயுமுள்ள திருநீர்மலை யென்று ஒரு பர்வதமுண்டு. அந்த பர்வதத்திலே கருடத்வஜராயும் ஷாட்குண்ய பரிபூர்ணராயும் தேவதேவராயுமுள்ள ஶ்ரியஃபதியானவர் ஸமஸ்தமான தேவர்களாலும் அஸுரர்களாலும் மற்றுமுள்ள மஹாபாகவதர்களாலும் எப்போதும் ஸேவிக்கப்பட்டவராய் எழுந்தருளியிருப்பது வாரீர் நாரதரே! உமக்கு பூர்வமே தெரிந்ததொன்றன்றோ!

तत उत्तरपूर्वस्यां दिशि तीरे महोदधेः । काचिदस्ति मुनिश्रेष्ठ पुरी देवपुरी शुभा ॥

தத உத்தரபூர்வஸ்யாம் திஶி தீரே மஹோததேஃ |
காசிதஸ்தி முநிஶ்ரேஷ்ட புரீ தேவபுரீ ஶுபா || 22

வாரீர் நாரதரே! அந்தத்திருநீர்மலைக்கு ஈசாந்யதிக்கிலே ஸமுத்திரத்தினுடைய கரையிலே அமராவதிபோல் மங்களகரமாயிருக்கிற ஓர் பட்டணமுண்டு.

उद्यानाम्रवणोपेता पताकाध्वजमालिनी । वज्रवैडूर्यचित्राङ्गैः गोपुरैश्च विराजिता ॥

दृढवप्रा सुविस्तीर्णा नानारत्नसमेधिता । कवाटैः काञ्चनमयैः मुक्ताजालविभूषितैः ॥

तोरणैर्वज्रघटितैः समृद्धा सर्वतश्शुभा । प्रासादगणसंकीर्णा चन्द्रशालाविराजिता ॥

चन्दनागरुधूपैश्च सर्वतः संप्रधूपिता । शोभिताऽत्युच्चशिखरैः सुधाधवलितैर्गृहैः ॥

केलीगृहैर्मनोज्ञैश्च युक्ता धारागृहैरपि । नानामणिविचित्रैश्च देवायतनमण्डलैः ॥

तत्रतत्र विराजन्ती चन्दनागरुधूपितैः । हृष्टपुष्टजनाकीर्णा सर्वसौभाग्यभाविता ॥

உத்யாநாம்ரவணோபேதா பதாகாத்வஜமாலிநீ |
வஜ்ரவைடூர்யசித்ராங்கைஃ கோபுரைஶ்ச விராஜிதா || 23
த்ருடவப்ரா ஸுவிஸ்தீர்ணா நாநாரத்நஸமேதிதா |
கவாடைஃ காஞ்சநமயைஃ முக்தாஜாலவிபூஷிதைஃ || 24
தோரணைர்வஜ்ரகடிதைஃ ஸம்ருத்தா ஸர்வதஶ்ஶுபா |
ப்ராஸாத கணஸங்கீர்ண சந்த்ரஶாலாவிராஜிதா || 25

சந்தநாகருதூபைஶ்ச ஸர்வதஸ்ஸம்ப்ரதூபிதா |
ஶோபிதாத்யுச்சஶிகரைः ஸுதாதவளிதைர்க்ருஹைः || 26

கேளீக்ருஹைர்மநோஜ்ஞைஶ்ச யுக்தா தாராக்ருஹைரபி |
நாநாமணிவிசித்ரைஶ்ச தேவாயதநமண்டலைः || 27

தத்ரதத்ர விராஜந்தீ சந்தநாகருதூபிதைः |
ஹ்ருஷ்டபுஷ்டஜநாகீர்ணா ஸர்வஸௌபாக்யபாவிதா || 28

அந்தப்பட்டணமானது எப்படி இருக்கிறதென்றால், உத்யாந வநங்களிலிருக்கிற தித்திப்பு மாமரங்களோடு கூடினதாயும் தோரண பங்க்தியை உடையதாயும் வஜ்ர வைடூர்யாதி ரத்நங்களினால் இழைக்கப்பட்ட ப்ரதேசங்களையுடைய கோபுரங்களினால் விளங்கப்பட்டதாயும், த்ருடமான ப்ராகாரங்களை உடைத்தானதாயும் மிகவும் விலாசமான தாயும் நாநாவிதமான (ரதகஜாதி) ச்ரேஷ்ட வஸ்துக்களாலே விருத்திபண்ணப்பட்டதாயும் முத்துக்களினால் அலங்க்ருதமாய் தங்கமயமான கதவுகளோடும் வஜ்ரகசிதங்களான தோரணங்களினாலும் நிரம்பியதாயும், ஸர்வப்ரகாரத்தாலும் மங்களகரையாயும், அநேக ப்ராஸாதங்களினால் நிபிடையாயும், சந்த்ரஶாலா ஶோபிதையாயும், அகரு சந்தந தூபங் களினால் தூபிதமான ப்ரதேஶங்களையுடையதாயும், அத்யந்தம் உந்நதங்களாய் ஸுதையினால் வெளுப்பாகப்பண்ணப்பட்ட க்ருஹங்களினால் சோபிதையாயும், மநோஜ்ஞங்களான லீலாக்ருஹங்களோடும் தாராக்ருஹங்களோடும் கூடினதாயும், நாநாரத்ன கசிதங்களாய் அகரு சந்தநப்புகைகளினால் தூபிதங்களுமான கோயில்களினுடைய ஸமூஹங்களினாலே ஆங்காங்கு ப்ரகாசியாநிற்பதாயும் ஹ்ருஷ்டபுஷ்டர்களான ஜனங்களினாலே ஸம்பூர்ணையாயும் ஸமஸ்த ஐச்வர்யங்களினாலே கொண்டாடப்பட்டதாயுமிருக்கிறது.

मयूरनगरी नाम विश्रुता भुवनत्रये ॥

மயூரநகரீ நாம விஶ்ருதா புவநத்ரயே || 29

அந்தப் பட்டணமானது மூன்று உலகங்களிலும் மயூரநகரி என்று பிரஸித்தி யாயிருக்கிறதன்றோ!

महता तपसाऽऽराध्य ब्रह्माणं लोकसत्कृतम् । यां लेभे वृषभो राजा विश्वकर्मविनिर्मिताम् ॥

மஹதா தபஸாऽऽராத்ய ப்ரஹ்மாணம் லோகஸத்க்ருதம் |
யாம் லேபே வ்ருஷபோ ராஜா விஶ்வகர்மவிநிர்மிதாம் || 30

விருஷபன் என்கிற ராஜச்ரேஷ்டன் லோகஸத்க்ருதரான ப்ரஹ்மாவை மிகுந்த தபஸ்ஸினால் ஸந்தோஷிப்பித்து, அந்த ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தினாலே விச்வகர்மாவினால் படைக்கப்பட்ட எந்தப் பட்டணத்தை அடைந்தானோ!

यत्र मन्दारकाख्याय मुनये शूद्रयोनये । प्रसन्नष्षण्मुखस्साक्षादभीष्टान्प्रददौ वरान् ॥

யத்ர மந்தாரகாக்யாய முநயே ஶூத்ரயோநயே |
ப்ரஸந்நஷ்ஷண்முகஸ்ஸாக்ஷாதபீஷ்டாந் ப்ரததௌ வராந் || 31

எந்தப்பட்டணத்திலே சூத்ரயோநியில் பிறந்து மந்தாரகனென்று பெயரையுடைய ருஷிக்கு ஷண்முகன் ப்ரஸன்னனாய் நேரேவந்து இஷ்டமான வரங்களைக் கொடுத்தானோ!

तदा प्रभृति तत्रैव भक्तवात्सल्ययोगतः । प्रभुः शक्तिधरोऽद्यापि सन्निधिं कुरुते सदा ॥

ததா ப்ரப்ருதி தத்ரைவ பக்தவாத்ஸல்யயோகதः |
ப்ரபுஶ்ஶக்திதரோऽத்யாபி ஸந்நிதிம் குருதே ஸதா || 32

அந்த மயூரநகரியிலே சக்திதரனாய் ப்ரபுவான ஸுப்ரஹ்மண்யனானவன் பக்தனை அந்த மந்தாரகனென்கிற ருஷியினிடத்தில் வாத்ஸல்யத்தினாலே அதுமுதலாக ஸர்வகாலமும் ப்ரத்யக்ஷமாயிருக்கிறான்.

यद्रामण्यकमुद्वीक्ष्य स्वर्गस्यैवच संपदम् । विहायाल्पतया स्वर्गं यत्र रेमे स शक्तिभृत् ।

யத்ராமண்யகமுத்வீக்ஷ்ய ஸ்வர்க்கஸ்யைவச ஸம்பதம் |
விஹாயால்பதயா ஸ்வர்க்கம் யத்ர ரேமே ஸ ஶக்திப்ருத் || 33

சக்திதரனை அந்த ஸுப்ரஹ்மண்யனைவன் எந்த மயூர நகரியினுடைய மனோஜ்ஞதையையும் ஸ்வர்க்க ஸம்பத்தையும் பார்த்து, இந்த பட்டணத்தைக் காட்டிலும் ஸ்வல்பமாயிருக்கையாலே ஸ்வர்க்கத்தைவிட்டு எந்த மயூரநகரியிலே க்ரீடியா நிற்கின்றனே!

सालैस्तालैस्तमालैश्च हिन्तालैश्चम्पकैरपि । नालिकेरैश्च पुन्नागैश्चूतैः स्वादुफलैरपि ॥
सिन्दुवारैर्गन्धपूरैः बीजपूरैर्धवैरपि । अशोकैः पाटलीभिश्च वकुलैर्वञ्जुलैरपि ॥
एवं बहुभिराकीर्णा वृक्षैः पुष्पफलान्वितैः ॥

ஸாலைஸ்தாலைஸ்தமாலைஶ்ச ஹிந்தாலைஶ்சம்பகைரபி |
நாலிகேரைஶ்ச புந்நாகைஃ சூதைஸ் ஸ்வாதுபலைரபி || 34
ஸிந்துவாரைர்கந்தபூரைஃ பிஜபூரைர்தவைரபி |
அஶோகைஃ பாடலீபிஶ்ச வகுலைர்வஞ்ஜுலைரபி ||
ஏவம் பஹுபிராகீர்ணா வ்ருக்ஷைஃ புஷ்பபலாந்விதைஃ || 35

திவ்யபுஷ்ப பலங்களோடு கூடின ஸால தால தமால ஹிந்தால நாலிகேர சூத சம்பக புந்நாக ஸிந்துவார பீஜபூர கந்தபூர தவ அசோக பாடல வகுல வஞ்ஜுலாதிகளான இப்படிப்பட்ட அநேக வ்ருக்ஷங்களினாலே யாதொரு பட்டணமானது நிபிடமாயிருக்கிறதோ!

कासारैस्सारसावासैः स्वच्छस्वादूदसंयुतैः । चक्रवाकानुचरितैः कारण्डवनिषेवितैः ॥
संकीर्णाः सर्वतः पुल्लपद्मकह्लारकेसरैः ॥

காஸாரைஸ்ஸாரஸாவாஸைஃ ஸ்வச்சஸ்வாதூதஸம்யுதைஃ |
சக்ரவாகாநுசரிதைஃ காராண்டவநிஷேவிதைஃ ||
ஸங்கீர்ணாஃ ஸர்வதஃ புல்லபத்மகஹ்லாரகேஸரைஃ || 36

தெளிந்து ருசியான தீர்த்தத்தோடு கூடியும் ஸாரஸபக்ஷிகள் சக்ரவாக பக்ஷிகள் காரண்டவபக்ஷிகள் இவை முதலான அநேக ஜலபக்ஷிகளாலே வஸிக்கப்பட்டதுகளாயும் விகஸிதங்களான பத்ம கஹ்லார கேஸரங்களையுடையனவாகவுமுள்ள தாமரையோடைகளினாலே யாதொரு பட்டணமானது நாலு பக்கங்களிலும் ஸம்பூர்ணையாயிருக்கிறதோ!

मायेति माधवीचेति मयूरनगरीति च । पठन्ति वैष्णवी चेति यन्नामानि पुराविदः ॥

மாயேதி மாதவீ சேதி மயூர நகரீதிச |
படந்தி வைஷ்ணவீ சேதி யந்நாமாநி புராவிதஃ || 37

மஹர்ஷிகளானவர்கள் எந்தப்பட்டணத்தினுடைய பேர்களை மாயை யென்றும் மயூரநகரியென்றும் வைஷ்ணவியென்றும் சொல்லா நிற்கின்றார்களோ!

एवंविधायास्तस्यास्तु नगर्या ह्यविदूरतः । बृन्दावनमिति ख्यातं तद्वनं देवपूजितम् ॥

ஏவம்விதாயாஸ்தஸ்யாஸ்து நகர்யா ஹ்யவிதூரதஃ |
ப்ருந்தாவநமிதி க்யாதம் தத்வநம் தேவபூஜிதம் || 38

இப்படிப்பட்ட அந்த மயூரநகரிக்கு ஸமீபத்திலே தேவபூஜிதமாய் ப்ருந்தாவனமென்று ப்ரஸித்தமான ஒரு வநம் இருக்கிறது.

उत्तरस्यां दिशि ह्येतत्तस्याः पुर्या महद्वनम् । कोदण्डशतमात्रं तु नगरीवनयोस्तयोः ॥

உத்தரஸ்யாந் திஶி ஹ்யேதத் தஸ்யாஃ புர்யா மஹத்வநம் |
கோதண்டஶதமாத்ரந்து நகரீவநயோஸ்தயோஃ || 39

இந்த ப்ருந்தாவனமானது மயூர நகரியினுடைய வடக்குதிக்கிலே யிருக்கிறது. அந்த மயூரநகரியென்ன ப்ருந்தாவனமென்ன இதுகளுடைய நடுவே நூறுவில்கிடை தூரம்.

तत्तु रम्यं मुनिश्रेष्ठ ! तुलसीकाननामिधम् । विपिनं विपुलश्रीकमनेकतरुसंकुलम् ॥

सेवितं मुनिशार्दूलैः सुशोभि विमलोदकैः । बृन्दावनमिति ख्यातं त्रिषु लोकेषु विश्रुतम् ॥

தத்து ரம்யம் முநிஶ்ரேஷ்ட துலஸீகாநநாபிதம் |
விபிநம் விபுலஶ்ரீகம் அநேகதருஸங்குலம் || 40

ஸேவிதம் முநிஶார்தூலை: ஸுஶோபி விமலோதகை: |
ப்ருந்தாவநமிதி க்யாதம் த்ரிஷு லோகேஷு விஶ்ருதம் || 41

வாரீர் ருஷிச்ரேஷ்டரான நாரதரே! துளஸீவநமென்று ப்ரஸித்தமாய் ரம்யமான வநமோவென்றால், அதிக ஸம்பத்தை உடைத்தானதாயும், அநேக வ்ருக்ஷஜாதிகளாலே நிபிடமாயும், நிர்மலங்களான தெளிந்த தீர்த்தங்களாலே மிகவும் அழகாயும், ருஷிச்ரேஷ்டர்களான ப்ருக்வாதிகளாலே ஸேவிதமாயும், ப்ருந்தாவனமென்று பெயரை உடையதாயும் மூன்று லோகங்களிலும் ப்ரஸித்தமாயிருக்கிறது.

विष्णोर्भगवतो यत्र मूर्तयस्सन्ति नारद ! । यत्र नित्यं हरिः साक्षाद्देवदेवो जगद्गुरुः ॥

आत्मानं पञ्चधा कृत्वा वसत्यमितविक्रमः ॥

விஷ்ணோர்பகவதோ யத்ர மூர்த்தயஸ்ஸந்தி நாரத |
யத்ர நித்யம் ஹரிஸ்ஸாக்ஷாத் தேவதேவோ ஜகத்குரு: || 42
ஆத்மாநம் பஞ்சதா க்ருத்வா வஸத்யமிதவிக்ரம: || 43

வாரீர் நாரதரே! எந்த ப்ருந்தாவனத்திலே ஷாட்குண்ய பரிபூர்ணராய் வ்யாபகரான ஶ்ரிய:பதியினுடைய திவ்யமங்கள விக்ரஹங்கள் இருக்கின்றனவோ, எந்த ப்ருந்தாவனத்தில் அமிதவிக்ரமராய் தேவதேவராய் ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலராய் ஜகதாசார்யரான எம்பெருமான் தன் திருமேனியை அஞ்சுவிதமாகச் செய்துகொண்டு ஸாக்ஷாத்தாக நித்யவாஸம் பண்ணுகிறரோ!

महापातकयुक्तोऽपि यत्र गत्वा विमुच्यते । न तत्को नाम जानाति बृन्दारण्यं महामुने ॥

மஹாபாதகயுக்தோऽபி யத்ர கத்வா விமுச்யதே |
ந தத்கோ நாம ஜாநாதி ப்ருந்தாரண்யம் மஹாமுநே || 44

வாரீர் நாரதரே! யாதொரு புருஷனைவன் மஹாபாதகயுக்தனயிருந்தாலும் எந்த ப்ருந்தாவனத்திலேபோய் அந்தப் பாபங்களினின்றும் விடுபடுகிறுனோ, அந்த வனத்தை எவன்தான் அறியான்!

तुलसीकानने यस्तु मुहूर्तमपि तिष्ठति । स वाजपेययज्ञस्य फलमाप्नोति पुष्कलम् ॥

துலஸீகாநநே யஸ்து முஹூர்த்தமபி திஷ்டதி |
ஸ வாஜபேயயஜ்ஞஸ்ய பலமாப்நோதி புஷ்கலம் || 45

யாதொருவன் ப்ருந்தாவனத்திலே முஹூர்த்தகாலமாகிலும் இருக்கிறனோ, அவன் வாஜபேயயஜ்ஞபலத்தை விசேஷமாக அடைகிறன்.

स्वप्नेऽपि यस्तु विप्रेन्द्र! तद्गतिं कलयेन्नरः । तदर्थफलमाप्नोति सतु पश्यति जागरे ॥

ஸ்வப்நேऽபி யஸ்து விப்ரேந்த்ர தத்கதிம் கலயேந்நர: |
ததர்த்தபலமாப்நோதி ஸது பஶ்யதி ஜாகரே || 46

வாரீர் நாரதரே! யாதொரு புருஷனைவன் ஸ்வப்நத்திலேயாகிலும் அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்து யாத்ரையை நினைக்கிறனோ, அந்தப் புருஷன் ஸ்வப்நாந்தத்திலே யாத்ரையை தடஸ்த்தமாகக் காண்கிறன். அந்த யாத்ராபலத்தையும் அடைகிறன்.

ये वसन्ति तदा तत्र बृन्दावनविभूषिते । तिर्यञ्चोऽपि पदं यान्ति ते विष्णोरमितौजसः ॥

யே வஸந்தி ததா தத்ர ப்ருந்தாவந விபூஷிதே |
திர்யஞ்சோऽபி பதம் யாந்தி தே விஷ்ணோரமிதௌஜஸ: || 47

ப்ருந்தாவனத்திலே அலங்க்ருதமான அந்த ப்ரதேசத்திலே எவைகள் வஸியா நிற்கின்றனவோ, அவை திர்யக்ஜாதியில் உத்பந்நங்களாயிருந்தாலும் அமிதௌஜஸ்ஸான விஷ்ணுவின் பதமான வைகுண்டத்தை அடையாநிற்கின்றன.

यस्तु तद्गच्छति नरो भक्तिहीनोऽपि कारणात् । तस्य पापानि नश्यन्ति ग्रीष्मेऽम्भांसीव सर्वतः ॥

யஸ்து தத்கச்சதி நரோ பக்திஹீநோऽபி காரணாத் |
தஸ்ய பாபாநி நச்யந்தி க்ரீஷ்மேऽம்பாம்ஸீவ ஸர்வத: || 48

யாதொரு புருஷன் பக்திஹீநனாயிருந்தாலும் ஒரானொரு ஹேதுவினால் அந்த ப்ருந்தாவனத்தை அடைகிறானோ, க்ரீஷ்மகாலத்திலே ஜலம் சோஷிக்குமாபோலே அவனுடைய பாபங்கள் முற்றும் நசிக்கின்றன.

तुलसीकाननं गच्छन्नुन्मत्तोऽपि यदृच्छया । विमुच्यते सर्वपापैः शरदीव घनैर्नभः ॥

துளஸீகாநநம் கச்சந்நுந்மத்தோऽபி யத்ருச்சயா |
விமுச்யதே ஸர்வபாபைச்சரதீவ கநைர்நப: || 49

உந்மத்தனானாலும் யத்ருச்சயா அந்த ப்ருந்தாவனத்தை அடைந்தானாகில், சரத்காலத்திலே ஆகாசமானது மேகங்களினால் விடுபடுமாபோலே ஸமஸ்தபாபங்களினாலே விடுபடுகிறான்.

यस्तु गच्छति तद्विद्वान् भक्तिश्रद्धापुरस्सरः । स विष्णुपदमाप्नोति तत्कुलानन्त्यमेव च ॥

யஸ்து கச்சதி தத்வித்வாந் பக்திச்ரத்தாபுரஸ்ஸர: |
ஸ விஷ்ணுபதமாப்நோதி தத்குலாநந்த்யமேவச || 50

எந்த வித்வான் பக்திச்ரத்தைகளை முன்னிட்டுக்கொண்டு அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகிறானோ, அந்தப் புருஷன் பரமபதத்தை அடைகிறான். அவனுடைய குலம் அபிவிருத்தமாகாநிற்கிறது.

बृन्देत्यक्षरयुग्मं च तुलसीत्यक्षरत्रयम् । संकीर्तयति योनाम तस्य पुण्यमनन्तकम् ॥

ப்ருந்தேத்யக்ஷரயுக்மஞ்ச துலஸீத்யக்ஷரத்ரயம் |
ஸங்கீர்த்தயதி யோநாம தஸ்ய புண்யமநந்தகம் || 51

யாதொரு புருஷனானவன் ப்ருந்தா என்கிற இரண்டு அக்ஷரங்களையும் துலஸீ என்கிற மூன்று அக்ஷரங்களையும் ஸங்கீர்த்தநம் பண்ணுகிறானோ, அந்த க்ஷணமே அவனுடைய புண்யமானது அபிவிருத்தமாகாநிற்கிறது.

यस्तु प्रातः समुत्थाय यत्रकुत्र वसन्नपि । तुलसीवनमित्येतद्वदन् याति परां गतिम् ॥

யஸ்து ப்ராதஸ்ஸமுத்தாய யத்ரகுத்ர வஸந்நபி |
துலஸீவநமித்யேதத் வதந் யாதி பராங்கதிம் || 52

யாதொரு புருஷன் எந்த தேசத்திலிருக்கிறவனாகிலும் ப்ராத:காலத்திலே எழுந்திருந்து இந்த ப்ருந்தாவனத்தை துளஸீவநம் என்று சொல்லாநிற்கிறானோ, அவன் உத்தமமான கதியை அடைகிறான்.

प्रातः काले शुचिर्भूत्वा यस्तु भक्तिसमन्वितः । बृन्दावनमिति ह्येतत् पञ्चकृत्वो जपन्नरः ॥

विधूय पापान् सकलान् कामान्प्राप्येह मानवः । अन्ते च तत्पदं याति यदनन्तमनादि च ॥

तत्सन्ततिभवास्सर्वे महाभागवता मुने । भवन्ति परमात्मानं प्राप्नुवन्ति मनीषिणः ॥

ப்ராத꞉காலே ஶுசிர்பூத்வா யஸ்து பக்திஸமந்வித꞉ |
ப்ருந்தாவநமிதி ஹ்யேதத் பஞ்சக்ருத்வோ ஜபந்நர꞉ || 53

விதூய பாபாந் ஸகலாந் காமாந் ப்ராப்யேஹ மாநவ꞉ |
அந்தேச தத்பதம் யாதி யதநந்தமநாதி ச || 54

தத்ஸந்ததிபவாஸ்ஸர்வே மஹாபாகவதா முநே |
பவந்தி பரமாத்மாநம் ப்ராப்நுவந்தி மநீஷிண꞉ || 55

யாதொரு புருஷன் பக்தியுக்தனாய்க் கொண்டு ப்ராத꞉காலத்தில் ஶுசியாயிருந்து ப்ருந்தாவனமென்று ப்ரஸித்தமான இந்த திவ்ய தேசத்தை அஞ்சுதரம் ஜபிக்கிறானோ அவன் ஸமஸ்தமான பாபங்களினின்றும் விடுபட்டவனாய் தர்மாதி ஸகல புருஷார்த்தங்களையும் இஹ லோகத்திலே அடைந்து, அந்தத்திலே எந்த ஸ்தாநமானது அநாதியாயும அநந்தமாயுமிருக்கிறதோ அப்படிப்பட்ட பரமபதத்தையும் அடையாநிற்கிறான். வாரீர் நாரதரே, அவனுடைய ஸந்ததியிலே உண்டாயிருக்கிற ஸமஸ்தமானவர்களும் ஜ்ஞாதாக்களாயும் பரம பாகவதர்களாயும் எம்பெருமானை அடையாநிற்கிறார்கள்.

गीयते च पुरा गीतः कदाचित्कारणान्तरे । सुमेरुशिखरे देवैः श्लोकोऽयं सहसङ्गतैः ॥

கீயதே ச புரா கீத꞉ கதாசித் காரணாந்தரே |
ஸுமேருஶிகரே தேவை꞉ ஶ்லோகோऽயம் ஸஹஸங்கதை꞉ || 56

ஓராவொரு கால விசேஷத்திலே ஒரு காரியப் பாடாக மேருபர்வதத்தினுடைய சிகரத்திலே சேர்ந்த தேவதைகளாலே இந்த ச்லோகமானது சொல்லப்பட்டது.

स्थानेषु वैष्णवेष्वेषु बृन्दारण्यमनुत्तमम् । सुरेषु माधवः श्रेष्ठः तद्भक्तेषु च शंकरः ॥

ஸ்தாநேஷு வைஷ்ணவேஷ்வேஷு ப்ருந்தாரண்யமநுத்தமம் |
ஸுரேஷு மாதவஶ்ஶ்ரேஷ்ட꞉ தத்பக்தேஷு ச ஶங்கர꞉ || 57

தேவதைகளுக்குள்ளே ஶ்ரிய꞉பதியானவர் எப்படி ச்ரேஷ்டரோ, அவருடைய அடியார்களுக்குள் சிவன் எப்படி ச்ரேஷ்டனோ, அவனுடைய திவ்ய தேசங்களுக்குள்ளே இந்த ப்ருந்தாவனமானது ச்ரேஷ்டமாயிருக்கிறது.

तस्मान्नारद ! कुत्रापि तत्समं नावलोकये । मुक्तिक्षेत्रं मनुष्याणां क्षेत्रं बृन्दावनाभिधम् ॥

தஸ்மாந்நாரத குத்ராபி தத்ஸமம் நாவலோகயே |
முக்திக்ஷேத்ரம் மநுஷ்யாணாம் க்ஷேத்ரம் ப்ருந்தாவநாபிதம் || 58

அப்படி தேவதைகளினாலே சொல்லப்பட்டிருக்கிறபடியால் வாரீர் நாரதரே, ப்ருந்தாவனமென்று பெயரையுடைத்தான எந்த க்ஷேத்ரமானது மனுஷ்யர்களுக்கு முக்தி விளையுமிடமோ தத்துல்யமான திவ்ய தேசத்தை எவ்விடத்திலேயும் பார்க்கவில்லை.

यस्तु तद्गच्छति नरो बृन्दारण्यं महामतिः । तस्यापराधं कुर्वन्तो गच्छन्ति नरकायुतम् ॥

யஸ்து தத்கச்சதி நரோ ப்ருந்தாரண்யம் மஹாமதி꞉ |
தஸ்யாபராதம் குர்வந்தோ கச்சந்தி நரகாயுதம் || 59

புத்திமானான எந்த புருஷன் அந்த ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகிறானோ, அந்த புருஷனை எவர்கள் நிந்திக்கிறார்களோ அவர்கள் நரக அயுதத்தை அடைகிறார்கள்.

बृन्दारण्यमिति ह्येतन्नास्त्यक्षरचतुष्टयम् । वदने यस्य मूर्खस्य तं दृष्ट्वा स्नानमाचरेत् ॥

ப்ருந்தாரண்யமிதி ஹ்யேதந்நாஸ்த்யக்ஷர சதுஷ்டயம் |
வதநே யஸ்ய மூர்க்கஸ்ய தம் த்ருஷ்ட்வா ஸ்நாநமாசரேத் || 60

ப்ருந்தாரண்யம் என்கிற இந்த அக்ஷரசதுஷ்டயத்தை எவன் த்வேஷத்தால் உச்சரியானோ; அந்த மூர்க்கனைப் பார்க்குமவன் ஸசேல ஸ்நாநம் பண்ணக்கடவன்.

तुलसीकाननं गन्तुं प्रवृत्तं यो निवारयेत् । तस्य पापात्मनो देहं स्पृष्ट्वा चान्द्रायणं चरेत् ॥

துலஸீகாநநம் கந்தும் ப்ரவ்ருத்தம் யோ நிவாரயேத் |
தஸ்ய பாபாத்மநோ தேஹம் ஸ்ப்ருஷ்ட்வா சாந்த்ராயணம் சரேத் || 61

யாதொரு புருஷனானவன், ப்ருந்தாவனத்தைக் குறித்துப் போகையிலே புறப்பட்ட புருஷனைத் தடுப்பானோ, அவன் தேஹத்தை ஸ்பர்சித்தால் சாந்த்ராயணவ்ரதம் பண்ணக் கடவன்.

वृन्दावनमिति ह्येतन्न वदेद्यो विमूढधीः । तं गर्दभं समारोप्य राजा राष्ट्राद्विवासयेत् ॥

ப்ருந்தாவநமிதி ஹ்யேதந் நவதேத்யோ விமூடதீ: |
தம் கர்த்தபம் ஸமாரோப்ய ராஜா ராஷ்ட்ராத் விவாஸயேத் || 62

எந்த மூடபுத்தியானவன் ப்ருந்தாவனமென்கிற அந்த திவ்யதேசத்தை வாக்கினாலும் சொல்லமாட்டானோ அவனை கர்தபாரோஹணம் செய்வித்து ராஜாவானவன் தன் ராஜ்யத்தினின்றும் துரத்தக்கடவன்.

वृन्दावनमितिह्येतन्न श्रुतं येन वै रुषा । तच्छ्रोत्रे त्वग्नितप्तेन सीसेनापूरयेत्सुधीः ॥

ப்ருந்தாவநமிதி ஹ்யேதந் நஸ்ருதம் யேநவை ருஷா |
தச்சோத்ரே த்வக்நிதப்தேந ஸீஸேநாபூரயேத ஸுதீ: || 63

எவனாலே கோபத்தினாலே இந்த ப்ருந்தாவன மென்கிற திவ்யதேசமானது கேட்கப் படாதோ, புத்திமானான ராஜாவானவன் உருக்கின ஈயத்தினாலே அவன் காதுகளை நிறைக்கக் கடவன்.

तुलसीकाननं यस्तु मनसाऽपि न चिन्तयेत् । तन्मनः सर्वपापानां निलयं मुनिसत्तम ! ॥

துளஸீகாநநம் யஸ்து மநஸாऽபி ந சிந்தயேத் |
தந்மநஸ் ஸர்வபாபாநாம் நிலயம் முநிஸத்தம || 64

யாவனொருவன் ப்ருந்தாவனத்தை மனஸ்ஸினாலும் நினையானோ, வாரீர் நாரதரே! அவனுடைய மனஸ்ஸு ஸகலபாபமூலமாக நிற்கிறது.

केनापि कीर्तिते तस्मिन् वृन्दारण्येऽञ्जलिं नरः । न करोति विमूढात्मा नरकानाप्नुयाद्ध्रुवम्

கேநாபி கீர்த்திதே தஸ்மிந் ப்ருந்தாரண்யேऽஞ்ஜலிம் நர: |
நகரோதி விமூடாத்மா நரகாநாப்நுயாத் த்ருவம் || 65

யாதொரு மநுஷ்யனானவன் மிகவும் மூடமான மநஸ்ஸை உடையவனாய்க்கொண்டு, எவனாலேயாகிலும் ப்ருந்தாவனமென்று சொல்லப்படா நின்றுள்ளவளவில் அஞ்ஜலியை செய்யானோ, அவன் நரகங்களை நிச்சயமாய் அடையக்கடவன்.

यो न पश्यति पापात्मा स्वप्नेऽपि तुलसीवनम् । स चक्षुषा युतो वाऽपि जात्यन्धो नात्र संशयः ॥

யோ நபஸ்யதி பாபாத்மா ஸ்வப்நேऽபி துலஸீவநம் |
ஸ சக்ஷுஷா யுதோவாऽபி ஜாத்யந்தோ நாத்ர ஸம்ஸய: || 66

யாவனொருவன் துலஸீவநத்தை ஸ்வப்னத்திலேயும் பார்த்திரானோ, அவன் விசாலமான கண்களோடேகூடியிருந்தும் பிறவிக்குருடனாயிருப்பனென்பதில் ஸம்சயமில்லை.

तत्र कैरविणी नाम सरसी फुल्लपङ्कजा । कैरवोत्पलसंछन्ना काचिदस्ति महामुने ॥

தத்ர கைரவிணீநாம ஸரஸீ புல்லபங்கஜா |
கைரவோத்பல ஸஞ்ச்சந்நா காசிதஸ்தி மஹாமுநே || 67

வாரீர் நாரதரே! அப்படிப்பட்ட ப்ருந்தாவனத்திலே விகஸிதங்களான தாமரஸ புஷ்பங்களினாலேயும் ஆம்பல்களினாலேயும் கருநெய்தல்களினாலேயும் அலங்கரிக்கப்பட்டிருக்கிற ஓரானொரு கைரவிணி என்கிற ஸரஸ்ஸானது இருக்கிறது.

तत्र स्नात्वा विमुच्यन्ते सर्वपापैश्च मानवाः । संसारजलधौ मग्नाः मज्जनादत्र नारद ॥
विधूतनिखिलाघौघाः गच्छन्ति परमां गतिम् ॥

தத்ர ஸ்நாத்வா விமுச்யந்தே ஸர்வபாபைஶ்ச மாநவா: |
ஸம்ஸாரஜலதௌ மக்நா: மஜ்ஜநாதத்ர நாரத ||
விதூதநிகிலாகௌகா: கச்சந்தி பரமாம் கதிம் || 68

மநுஷ்யர்கள் அந்த ஸரஸ்ஸிலே ஸ்நாநம் பண்ணி ஸர்வபாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். வாரீர் நாரதரே! அந்த ஸரஸ்ஸிலே ஸ்நாநமாத்ரத்திநாலே ஸம்ஸாரஜலதி மக்நர்களான மநுஷ்யர்கள் போக்கடிக்கப்பட்ட ஸகலபாப ஸமூஹங்களையுடையவர்களாய்க் கொண்டு பரம புருஷார்த்தலக்ஷண மோக்ஷத்தை அடைகிறார்கள்.

अस्या जलमुपस्पृश्य पीत्वा दृष्ट्वाऽपि मानवः । मुच्यमानो भवाघौघैः गच्छत्यन्ते पदं हरेः ॥

அஸ்யா ஜலமுபஸ்ப்ருஶ்ய பீத்வா த்ருஷ்ட்வாऽபி மாநவ: |
முச்யமாநோ பவாகௌகை: கச்சத்யந்தே பதம் ஹரே: || 69

புருஷனானவன் இந்த கைரவிணீ தீர்த்தத்தை ஸ்பர்ஶித்தாலும் பாநம் பண்ணினாலும் பார்த்தாலும் பாபஸமூஹங்களினாலே விடுபட்டவனாய்க்கொண்டு பகவத்பதத்தை அடையா நிற்கிறான்.

यस्तु कैरविणीतीरे तत्तरङ्गानिलावृते । नित्यं वसति धर्मात्मा तद्वशं याति माधवः ॥

யஸ்து கைரவிணீதீரே தத்தரங்காநிலாவ்ருதே |
நித்யம் வஸதி தர்மாத்மா தத்வஶம் யாதி மாதவ: || 70

யாதொரு புருஷனானவன் அந்தக்கைரவிணியினுடைய தரங்காநிலாவ்ருதமான கரையிலே நித்யவாஸம் பண்ணுகிறானோ, ஶ்ரிய:பதியான எம்பெருமான் அவனிட்டவழக்காயிருக்கிறான்.

एतद्विदित्वा मुनिवर्य ! यो वै मुक्तिं मुकुन्दादधिगन्तुकामः ।
बृन्दावने निर्ममधीः करोति भक्तिं समाप्नोति स सर्वकामान् ॥

ஏதத் விதித்வா முநிவர்ய யோவை முக்திம் முகுந்தாததிகந்துகாம: |
ப்ருந்தாவநே நிர்மமதீ: கரோதி பக்திம் ஸமாப்நோதி ஸ ஸர்வகாமாந் || 71

வாரீர் ருஷிச்ரேஷ்டரான நாரதரே! யாதொரு புருஷனானவன் இந்த ப்ருந்தாவன வைபவத்தை அறிந்து நிர்மமனாய் முக்திப்ரதனான எம்பெருமானாலே மோக்ஷத்தை அடைய இச்சித்தவனாய் பகவத்பக்தியைப் பண்ணுகிறானோ, அவன் ஸமஸ்த காமங்களையும் அடைகிறான்.

इति श्रीब्रह्माण्डपुराणे महेश्वरनारदसंवादे श्रीबृन्दारण्यक्षेत्रमाहात्म्ये प्रथमोऽध्यायः ।

श्रीमद्वरवरमुनये नमः

இதி ஸ்ரீப்ரஹ்மாண்டபுராணே மஹேஶ்வரநாரதஸம்வாதே
ஸ்ரீப்ருந்தாரண்யக்ஷேத்ரமாஹாத்ம்யே ப்ரதமோऽத்யாய:.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

श्रीवृन्दारण्यक्षेत्रमाहात्म्ये द्वितीयोऽध्यायः

ஸ்ரீப்ருந்தாரண்யக்ஷேத்ரமாஹாத்ம்யே த்விதீயோऽத்யாயః

नारदः— நாரதః—

तत्र या मूर्तयः पञ्च विष्णोः सन्तीति विश्रुताः । ताः श्रोतुमहमिच्छामि परं कौतूहलं हि मे ॥

தத்ர யா மூர்த்தயః பஞ்ச விஷ்ணோஸ்ஸந்தீதி விஶ்ருதாః |
தாஶ்ஶ்ரோதுமஹமிச்சாமி பரம் கௌதூஹலம் ஹி மே || 1

வாரீர் மஹேசுவரனே! அந்த ப்ருந்தாவனத்திலே எம்பெருமானுக்கு யாதொரு அஞ்சுவிதமான திருக்கோலங்களிருக்கின்றனவென்று ப்ரஸித்தங்களோ, அந்த திவ்யமங்கள விக்ரஹ விஷயமான விசேஷங்களை நான் கேட்க விரும்புகிறேன். அதைக்கேட்கிறதிலே எனக்கு மிகுந்த குதூஹலமிருக்கிறது.

महेश्वरः— மஹேஶ்வரः—

यच्छ्रोतुमिच्छसि मुने कौतूहलसमन्वितः । तत्सर्वं कथयिष्यामि यथातत्त्वं महामते ! ॥

யச்ச்ரோதுமிச்சஸி முநே கௌதூஹலஸமந்விதः |
தத்ஸர்வம் கதயிஷ்யாமி யதாதத்த்வம் மஹாமதே || 2

வாரீர் புத்திமானான மநநசீலரான நாரதரே! குதூஹலத்தோடே கூடினவராய் எந்த வைபவத்தைக் கேட்கிறதையும்பொருட்டு இச்சியாநிற்கிறீரோ, அந்த ஸமஸ்தமான வைபவத்தை உண்மையாய்ச் சொல்லுகிறேன்.

पुरा तत्र कदाचिद्वै सुपुण्ये तुलसीवने । भृग्वाद्या मुनयः सप्त तपस्तेपुः सुदुष्करम् ॥

புரா தத்ர கதாசித்வை ஸுபுண்யே துலஸீவநே |
ப்ருக்வாத்யா முநயஸ்ஸப்த தபஸ்தேபுஸ்ஸுதுஷ்கரம் || 3

முன்பு மிக்க பாவனமான அத்துளஸீவநத்திலே ஒருகால் ப்ருகுமுதலான ஏழு மஹர்ஷிகள் தபஸ்ஸைப் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

भृगुरत्रिर्मरीचिश्च मार्कण्डेयस्तथाऽपरः । सुमतिस्सप्तरोमा च तथा जालिश्च सप्तमः ॥

एते पावकसंकाशाः पवनाम्बुच्छदाशिनः । तपश्चेरुर्महद्घोरं मुनयो मोक्षकाङ्क्षिणः ॥

ப்ருகுரத்ரிர்மரீசிஶ்ச மார்க்கண்டேயஸ்ததாऽபரः |
ஸுமதிஸ்ஸப்தரோமா ச ததா ஜாலிஶ்ச ஸப்தமः || 4

ஏதே பாவகஸங்காஶாः பவநாம்புச்சதாஶிநः |
தபஶ்சேருர்மஹத்கோரம் முநயோ மோக்ஷகாங்க்ஷிணः || 5

இப்படி தபஸ்ஸு பண்ணும் ருஷிகள் எவர்கள் என்றால் ப்ருகு என்றும் அத்ரி என்றும் மரீசி என்றும் மார்க்கண்டேயர் என்றும் ஸுமதி என்றும் ஸப்தரோமா என்றும் அப்படியே ஜாலி என்றும் இந்த மஹர்ஷிகள் அக்நிபோலே ப்ரகாசியாநின்றுகொண்டு மோக்ஷார்த்திகளாய் வாயு, ஜலம், சருகு இவை முதலானவைகளை ஆஹாரமாகக் கொண்டு மிகவும் கோரமான தபஸ்ஸைப்பண்ணினார்கள்.

एतस्मिन्नन्तरे काले मध्ये दुग्धपयोनिधेः । अनन्ते भुजगाधीशे शारदाम्बुदपाण्डरे ॥

शयानस्य जगद्रक्षाजागरूकस्य काङ्क्षिणः । सुरासुरगुरोर्विष्णोः लक्ष्म्याश्च मुनिसत्तम ॥

कदाचित् प्रणयक्रोधः प्रादुरासीन्मनोहरः ॥

ஏதஸ்மிந்நந்தரே காலே மத்யே துக்தபயோநிதே: |
அநந்தே புஜகாதீசே ஶாரதாம்புதபாண்டரே || 6

ஶயாநஸ்ய ஜகத்ரக்ஷாஜாகரூகஸ்ய காங்க்ஷிண: |
ஸுராஸுரகுரோர் விஷ்ணோ: லக்ஷ்ம்யாஶ்ச முநிஸத்தம ||
கதாசித் ப்ரணயக்ரோத: ப்ராதுராஸீந்மநோஹர: || 7

வாரீர் நாரதரே! இப்படி தபஸ்ஸு பண்ணிக்கொண்டிருக்கிற காலத்திலே க்ஷீர ஸமுத்திரத்தினுடைய மத்யத்திலே சரத்காலமேகம்போலே வெளுத்தும் ஸர்ப்பராஜனை திருவநந்தாழ்வான்மேலே திருக்கண்வளர்த்தி செய்தருளாநின்றும் ஜகத்ரக்ஷணஜாகரூகராயும் ஆச்ரிதர்களுடைய வரவை அபேக்ஷியாநின்றும் ஸுராஸுர குருவுமான ஶ்ரிய:பதிக்கும் பெரியபிராட்டியாருக்கும் ஒருஸமயம மநோஹரமான ப்ரணயகலஹமானது உண்டாச்சுது.

तस्मिन् प्रवृत्ते लक्ष्मीस्तु कोपसंरक्तलोचना । वक्षःपीठात्तदा विष्णोः निपत्य द्रुतमागता ॥

तदाश्रमपदं पुण्यं बृन्दारण्यं महात्मनः । भृगोर्मुनिवराकीर्णं कृपयाऽम्बुधिनन्दिनी ॥

தஸ்மிந் ப்ரவ்ருத்தே லக்ஷ்மீஸ்து கோபஸம்ரக்தலோசநா |
வக்ஷ:பீடாத்ததா விஷ்ணோ: நிபத்ய த்ருதமாகதா || 8

ததாஶ்ரமபதம் புண்யம் ப்ருந்தாரண்யம் மஹாத்மந: |
ப்ருகோர்முநிவராகீர்ணம் க்ருபயாऽம்புதிநந்திநீ || 9

அப்படி ப்ரணய கலஹமுண்டாயிருந்துள்ளவளவில் அப்போது க்ஷீராப்திநந்திநியான பெரிய பிராட்டியாரும கோபத்தாலே சிவந்த நேத்திரங்களையுடையவளாய்க்கொண்டு, விஷ்ணுவினுடைய வக்ஷ:பீடத்தினின்று மிறங்கி, ருஷிச்ரேஷ்டர்களாலே நிபிடமாயும் பாவநமாயும பிருந்தாரண்யமென்று பெயரை யுடையதாயுமுள்ள மஹாதபஸ்வியான பிருகு மஹர்ஷியின் அந்த ஆச்ரமஸ்தாநத்தைக் குறித்து க்ருபையாலே வேகமாக எழுந்தருளினாள்.

तत्रागत्याश्रमे रम्ये वपुः कृत्वाऽतिकोमलम् । कस्यापि चन्दनतरोर्मूले शिश्ये सुबालिका ॥

தத்ராகத்யாஶ்ரமே ரம்யே வபு:க்ருத்வாऽதிகோமலம் |
கஸ்யாபி சந்தநதரோ: மூலே ஶிஶ்யே ஸுபாலிகா || 10

அந்த பெரிய பிராட்டியாரானவள் ரம்யமான அந்த பிருக்வாச்ரமத்திலே வந்து மிகவும் கோமளமான அப்ராக்ருத திவ்யமங்கலவிக்ரஹத்தைத் தரித்து சிறுகுழந்தையாய்க் கொண்டு ஓராரொரு சந்தந வ்ருக்ஷத்தின்கீழே சயநித்துக்கொண்டாள்.

ततः कदाचित्तं देशमाजगाम यदृच्छया । भृगुःशिष्यैः परिवृतो मार्कण्डेयेन संयुतः ॥

தத: கதாசித் தம் தேஶமாஜகாம யத்ருச்சயா |
ப்ருகுஶ்ஶிஷ்யை: பரிவ்ருதோ மார்க்கண்டேயேந ஸம்யுத: || 11

அநந்தரம் ப்ருகுமஹர்ஷியானவர் மார்க்கண்டேயரோடு கூடினவராய் ஶிஷ்யர்களாலே சூழப்பட்டவராய்க்கொண்டு ஸ்வேச்சையாலே ஒருகால் அந்த ப்ரதேசத்தை அடைந்தார்.

तां दृष्ट्वा तत्र विप्रेन्द्रः सुकुमारीं मनोहराम् । विस्मयं परमं प्राप्तः तेच तस्यानुयायिनः ॥

தாம் த்ருஷ்ட்வா தத்ர விப்ரேந்த்ர: ஸுகுமாரீம் மநோஹராம் |
விஸ்மயம் பரமம் ப்ராப்த: தேச தஸ்யாநுயாயிந: || 12

அந்த ப்ரதேசத்திலே ப்ருகுமஹர்ஷியானவர், ஸுகுமாரியாயும் மநோஹரையாயுமிருக்கிற அந்தப் பெண்ணைப்பார்த்து மிக்க ஆஶ்சர்யத்தை அடைந்தார். அவரைப்பின் செல்லாநிற்கிற அந்த மஹர்ஷிகளும அப்படியே ஆஶ்சர்யத்தை அடைந்தார்கள்.

किमेतच्चन्दनतरोरिति मूले कुमारिकाम् । तेऽपश्यंश्चारुसर्वाङ्गीं तप्तहाटकसन्निभाम् ॥
फुल्लपङ्कजगर्भाभपाणिपादतलोदराम् । सर्वलक्षणसंपन्नां किञ्चिदुन्मीलमूर्धजाम् ॥
लसल्ललाटफलकां सुभ्रुवं ललिताननाम् । विकचेन्दीवराभाक्षीं सुनासां मन्दहासिनीम् ॥
आकुञ्चिताङ्गुलिकरद्वन्द्वां कम्ब्वाभकन्धराम् ।

கிமேதச்சந்தநதரோரிதி மூலே குமாரிகாம் |
தேऽபஶ்யம்ஶ்சாருஸர்வாங்கீம் தப்தஹாடகஸந்நிபாம் || 13

புல்லபங்கஜகர்ப்பாப பாணிபாததலோதராம் |
ஸர்வலக்ஷண ஸம்பந்நாம் கிஞ்சிதுந்மீலமூர்த்தஜாம் || 14

லஸல்லலாடபலகாம் ஸுப்ருவம் லலிதாநநாம் |
விகசேந்தீவராபாக்ஷீம் ஸுநாஸாம் மந்தஹாஸிநீம் |
ஆகுஞ்சிதாங்குலிகரத்வந்த்வாம் கம்ப்வாபகந்தராம் || 15

மிக்க பாக்யவான்களான அந்த மஹர்ஷிகள், ஓடவைத்த தங்கத்தோடு ஸமாநமான தேஹகாந்தியை யுடைத்தாயிருப்பவளாயும் அழகான ஸர்வாவயவங்களை யுடையவளாயும் விகஸித்த தாமரஸபுஷ்பத்தினுடைய கர்ப்பகாந்தியைப்போலொத்த காந்தியையுடைய திருக்கைத்தலங்களென்ன திருவடிகளென்ன உள்ளங்கைபோலொத்த திருவுதரமென்ன இதுகளை உடைத்தாயிருப்பவளாயும், ஸர்வலக்ஷண ஸம்பந்நையாயும் கொஞ்சம் அங்குரிதமான திருக்குழல்களை யுடையவளாயும் பலகைபோல் ப்ரகாசியாநிற்கிற நெற்றியையுடையவளாயும் அழகான புருவங்களை யுடையவளாயும் ஸுந்தரமான திருமுக மண்டலத்தை யுடையவளாயும் விகஸித்த கருநெய்தல்களுடைய காந்தியைப்போன்ற காந்தியையுடைய திருநயநங்களை யுடையவளாயும் அழகான நாஸிகையை யுடையவளாயும் புன்சிரிப்பை உடையவளாயும் சங்கம்போலே அடி பெருத்து நுனிசிறுத்து த்ரிரேகாந்விதமான கழுத்தை யுடையவளாயும் ஆகுஞ்சிதமான விரல்களைக்கொண்ட இரண்டு திருக்கைகளை யுடையவளாயுமிருக்கிற அந்தப் பெண்ணை சந்தந வ்ருக்ஷமூலத்தில் இதென்னவென்று ஆச்சர்யபூரிதர்களாய்ப் பார்த்தார்கள்.

अथोपसृत्य ते सर्वे तस्थुर्विस्मितमानसाः । मुनयस्तां महाभागाः पश्यन्तोऽनिमिषेक्षणाः ॥

அதோபஸ்ருத்ய தே ஸர்வே தஸ்துர்விஸ்மிதமாநஸாঃ |
முநயஸ்தாம் மஹாபாகாঃ பஶ்யந்தோऽநிமிஷேக்ஷணாঃ || 16

பிறகு மஹா பாக்யவான்களான அந்த ருஷிகள் அனைவரும் அந்த பெண்ணைக்கிட்டி இமையாத கண்ணராய்ப் பாரா நின்றுகொண்டு விஸ்மித மநஸ்கர்களாயிருந்தார்கள்.

ततः कराभ्यामादाय बालामिन्दुनिभाननाम् । भृगुः स्वमाश्रमं तूर्णमाजगाम महामुने ॥

ததঃகராப்யாமாதாய பாலாமிந்துநிபாநநாம் |
ப்ருகுஸ்ஸ்வமாஶ்ரமம் தூர்ணமாஜகாம மஹாமுநே || 17

அதற்குப்பிறகு ப்ருகுமஹாமுனிவர் சந்த்ரனோடே ஸமாநமான திருமுகமண்டலத்தை யுடைத்தான அந்த பெண்குழந்தையைக் கைகளாலே எடுத்துக்கொண்டு தன் ஆச்ரமத்தைக்குறித்து த்வரையாக வந்தார்.

स्वाश्रमं समुपागत्य निजदारानथाब्रवीत् । मुनिः कुमारीमेतां वै रक्षध्वमिति सादरम् ॥

ஸ்வாஶ்ரமம் ஸமுபாகத்ய நிஜதாராநதாப்ரவீத் |
முநிঃ குமாரீமேதாம்வை ரக்ஷத்வமிதி ஸாதரம் || 18

ப்ருகுவானவர் ஸ்வாச்ரமத்தை அடைந்து ஸ்வபார்யையைப் பார்த்து இந்தப் பெண்ணை ஸாதரமாக ரக்ஷியுங்கோள் என்று சொன்னார்.

PHOTO BY T N SRINIVASAN

ஸ்ரீ வேதவல்லித் தாயார்

तां पश्यमानास्ताः सर्वा ऋषिपत्न्यो मनोहराम् । कुमारीं विस्मयं जग्मुः महतीं च तदा मुदम् ॥

தாம் பஶ்யமாநாஸ்தாஸ்ஸர்வா ருஷிபத்ந்யோ மநோஹராம் |
குமாரீம் விஸ்மயம் ஜக்முஃ மஹதீம் ச ததா முதம் || 19

அதிமநோஹரையான அந்தப்பெண்ணை ஸமஸ்தமான ருஷிபத்நிகளும் பார்த்துநின்று கொண்டு மஹத்தரமான ஆஶ்சர்யத்தையும் ஸந்தோஷத்தையும் அடைந்தார்கள்.

ततः प्रमुदिता लक्ष्मीमरक्षन् बालिकामिव । साऽपि तासामृषिस्त्रीणां जनयन्ती परां मुदम् ॥
व्यवर्धत प्रतिदिनम् वर्षास्विव तरङ्गिणी ।

ததஃ ப்ரமுதிதா லக்ஷ்மீமரக்ஷந் பாலிகாமிவ |
ஸாऽபி தாஸாம் ருஷிஸ்த்ரீணாம் ஜநயந்தீ பராம் முதம் ||
வ்யவர்த்தத ப்ரதிதிநம் வர்ஷாஸ்விவ தரங்கிணீ || 20

அதற்குப்பிறகு அந்த ருஷிபத்நிகள் ஸந்துஷ்டைகளாய்க்கொண்டு பெரிய பிராட்டியாரை, பெண்ணைப்போல் வளர்த்தார்கள். அந்தப்பெண்ணும் அந்த ருஷிபத்நிகளுக்கு அதிகமான ஸந்தோஷத்தை உண்டுபண்ணா நின்றுகொண்டு வர்ஷாகாலத்தில் நதிபோல் ப்ரதிதினம் வளர்ந்தாள்.

ततस्तस्या भृगुः पुण्ये वासरेऽन्यैस्सहर्षिभिः । नाम चक्रे मुनिश्रेष्ठो वेदवल्लीति नारद ॥

ததஸ்தஸ்யா ப்ருகுஃ புண்யே வாஸரேऽந்யைஸ்ஸஹர்ஷிபிஃ |
நாம சக்ரே முநிஶ்ரேஷ்டோ வேதவல்லீதி நாரத || 21

